உ

அகஸ்தியன்.

உலகநன்மைக் கெனவே உலவிவரும்

ஒரு இனிய தமிழ்

மாதாந்தப் பத்திரிகை.

புத்தகம் 1.	1922-௵ அக்டோபர்௴ துந்துபி ௵ ஐப்பசி ௳	இலக்கம் 2.

நமது பத்திரிகை.

நமது அகஸ்தியன் பத்திரிகை தமிழுலகில் இன்று இரண்டாம் முறையாக உதயமாகின்றது. இப்பத்திரிகையின் அழியாக்கொள்கைகளை யறிந்த அன்பர்கள் இன்று அதனைக்கண்டு அகமிக மகிழ்ந்து ஆனந்தங் கொள்வார்களென்பதில் ஐயமில்லை. ஆனால், ஸ்ரீவராஹமிஹிரர் என்னும் புராதன இந்திய வான சாஸ்திரியார் சொல்லிய வண்ணம் உலக நன்மையையும் ஆத்ம நலத்தையும் கோருவோர் பலர், "ஆகாயத்தில் உதயமாகின்ற அகஸ்திய நக்ஷத்திரத்தின் தரிசனத்தைக் குறித்துக் காத்திருப்பதுபோல" நாமும் நமது நேயர்களாகிய தமிழுலகத்தினரை நமது "அகஸ்தியதரிசனத்திற்காக" -பலபல மாதங்கள் வரை காத்திருக்கச்செய்தோமென நம் மீது பல உரிமையாளர் குறை எற்றுகின்றனர். அதனை அங்கீகரிப்பதிலும் நமக்குச் சிறிது உரிமையிருக்கின்றது!

நமது பிரம்ம நிஷ்டாமடம் சிற்சபையின் உத்தேசமாகிய பூமண்டல நன்மையை அந்த அன்பர்களும் நன்கறிவார்களாதலால், அவர்களது ஆவலை நாம் இத்துணை காலதாமதங்கொண்டு நிறைவேற்றத் தொடங்கும்படி நேர்ந்துவிட்ட காரணங்களை அவசியம் அவர்களுக்கு விளக்கவேண்டிய கடமையும் நமக்கு ஏற்படுகின்றது. அந்தக்கடமையையொட்டி இப்பால் நம் அகஸ்தியனது தரிசனம் (தோன்றல்) இனித்

தமிழுலகிற்கு சாசுவதமாய் நிகழ்வதற்கான ஏற்பாடுகள் பூர்த்திசெய்யப் பெற்றிருக்கின்றன என்ற சந்தோஷ சமாசாரத்தையும், ஸ்ரீஸ்வாமிகளின் இலங்கை விஜயத்தால் அகஸ்தியனது ஒளி இந்தியாவில் மட்டுமன்றி இலங்கை பூமியிலும் பூரணப் பிரகாசத்தோடு விளங்கும்படியான் நன்மை இத்துணை சிறியகாலத்திற்குள் ஏற்பட்டுள்ளது என்பதையும் இங்கு மனப்பூர்வமாக அவ் அன்பர்களுக்கு நாம் சொல்லிக் கொள்ள வேண்டிய செய்தியாகும்.

ஸ்ரீ ஸதானந்த ஸ்வாமிகளின்

இலங்கை விஜயம்,

அகஸ்தியனது முதலாவது இலக்கம் வெளியானவுடன் சுவாமிகளின் விசால நோக்கங்களையும் சிற் சபையின் நன் முயற்சிகளையுமுணர்ந்த இலங்கைத் தேசவாசிகள் பலர் ஸ்வாமிகள் அங்கு ஓர் முறை விஜயஞ்செய்ய வேண்டுமென விரும்பினர்.

அவ்விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக ஸ்வாமிகள் அகஸ்தியாசிரமத்திலிருந்து புறப்பட்டுப் பாண்டியதேசத்தின் வழியே பிரயாணந் தொடங்கினர்.

“கரும்புக்குக் கிராக்கி எங்கும் உண்டு” என்பதுபோல் இந்திய பூமியைக்கடந்து இலங்கைக்குச் செல்லுமுன் ஊரூராக ஸ்வாமிகளின் பிரசங்கத்தைக் கேட்க விரும்பிய ஜனங்கள் “சில நாட்களுக்குள் முடிக்கவிருந்த ஸ்வாமிகளின் இலங்கை விஜயத்தைப்” பல மாதங்கள் செல்லும்படி பெருக்கிவிட்டனர்! அக்காரணத்தால் வழிநெடுக- செங்கோட்டை முதல் தூத்துக்குடி வரையிலுள்ள பல- இடங்களிலும் பிரசங்கங்கள் நடைபெற்றன. முக்கியமாக தென்காசி, சாத்தூர், சிவகாசி, கோயில் பட்டி, விருதுபட்டி, ஸ்ரீவில்லிப்புத்தூர், மதுரை, தேவகோட்டை, காரைக்குடி, பள்ளத்தூா, இந்த இடங்களில் நடந்த பிரசங்கங்கள் குறிக்கத் தக்கன. இவை முடிந்தபின் ஸ்வாமிகள் இலங்கைக்குப் புறப்படுங்கால் 1921-ம் வருஷம் பூர்த்தியாகும் தருணத்தையு மடைந்து விட்டது.

இனி, இலங்கைபூமியை யடுக்குமுன் இந்தியாவில் ஸ்தாபிக்கப் பட்டுள்ள பிரம்ம நிஷ்டாமடம் சிற்சபையின் உத்தேசத்தையும், அதன் முயற்சிகளையும் அந்த முயற்சிகளால் விளைந்த பயன்களையும் இங்கு ஒருவாறு குறிப்பிடுவது சமயோசிதமாதுமெனக் கருதுகின்றோம்.

பிரம்ம நிஷ்டாமடம் சிற்சபையின் உத்தேசம்.

உத்தேசமில்லாமல் உலகில் ஒருவரும் ஒரு காரியமுஞ் செய்வதில்லை. அதிலும் நீண்டகாலம் நிலவி நன்கு விளங்கவேண்டிய ஒரு ஸ்தாபனம் என்றால் அதன் உத்தேசமும் நீண்டதாக இருக்கவேண்டிய அவசியமுமுண்டு. அதுபோல, பிரம்ம நிஷ்டாமடம் சிற் சபையின் உத்தேசத்தையும் குறிப்பதென்றால் "ஈசனது ஆக்கினை வடிவமாய் விளங்குகின்ற மஹாப் பிரகிருதி தேவியின் சுபாவ நியமங்களைப் பூராவும் அங்கீகரித்து அதன்படி யனுஷ்டித்து வருதலின் வாயிலாய் மனித ஜன்மத்தின் முக்கிய உத்தேசமாகிய 'சித்தி, முக்தி' என்ற இரண்டையும் மனிதவர்க்கம் அடையும்படி செய்வதே" என்று மொத்தமாகக் கூறிவிடலாம்.

இனி, இந்த சபையினது நோக்கங்களின் ஒவ்வோர் பகுதியைப் பாவச் செய்வதற்காக இப்பரத கண்டத்தில் ஒவ்வோர் காலத்தில் ஒவ்வொரு மஹான் தோன்றி தம்தம் நோக்கத்திற்கேற்ப சில ஸ்தாபனங்களை ஏற்படுத்தியிருக்கின்றனர்; அந்த அந்த நோக்கங்களைப் பின்பற்றி ஜனங்கள் வேலைசெய்யுமாறும் அவர்கள் செய்திருக்கின்றனர். ஆயினும், குறித்த லக்ஷியங்கள் இன்னும் நிறைவேறாமலிருப்பதை மறைப்பதற்கில்லை. அவ்வாறு நிறைவேறாமலிருப்பதன் காரணம் யாதெனின், அந்த உத்தேசங்களை நிறைவேற்றத் தொடங்கும் ஜனங்களின் மனத்திலடங்கிக் கிடக்கின்ற குறுகிய எண்ணங்கள்தாம். அவை உண்மையாகவே ஒன்றுக்கொன்று வேறுபட்ட அபிப்பிராய முடையனவாயும்—பரஸ்பர விரோதங்கொண்டனவாயும்- கால அளவிலே வலுத்துப் போயின; "ஆதியில் உத்தேசித்திருந்த பொது லக்ஷியத்திலிருந்தும்" அவை வெகு தூரம் விலகிவிட்டன; அவை பல பல கிளைக் கொள்கைகள் முளைக்கப் பெற்று நான்கு பக்கங்களிலும் தாறுமாறாய் வளர்ந்து வரவும் தொடங்கின.

இவ்விதம் அந்த அந்த ஸ்தாபனங்கள்—சபைகள்—தமது முக்கிய நோக்கத்தினின்றும் மாறிச்சென்று கொண்டிருந்ததால் பொதுவாக அவற்றின் நன்மைகள் முதலில் குறையத் தொடங்கிற்று. சிறப்பாக அவற்றைப் பின் பற்றிப் பிற்காலங்களில் வாழத் தொடங்கிய பூலோக ஜனசமூக வாழ்க்கையின் நோக்கம் சிதறுண்டு போகவும் பிறகு இடமுண்டாயிற்று. இவ்விருகாரணங்களாலும் உலகத்திலுள்ள ஜனங்கள் தமக்கு என்றும் குன்றாத நன்மையளிக்கக்கூடிய பொது நோக்கத்தில் சென்று சேர்ந்து சுகம்பெற இடமில்லாது போயிற்று.

"உலகெலாம் நன்மையடைய வேண்டும்" என்னும் ஈசனது பிரதிக்ஞையை நிறைவேற்றிக் கொள்ள முடியாமலும் உலகம் வருந்த ஏதுவாயிற்று. இத்தருணத்தில் சரியானபடி இவ் வுண்மையை எடுத்து விளக்கி உலக ஜன சமூகத்திற்கு ஒரு பொதுவான நல்லுணர்வு உண்டாக்கவேண்டிய அவசியம் வந்தது. ஒவ்வொரு பிரத்தியேகக்

கொள்கைகளில் தங்கிநின்று அவற்றை உடும்புப்பிடியாகக் கொண்டு உழலுகின்ற குறித்த ஸ்தாபனங்களின் பிடிவாதக் கொள்கைகளை தாமே விடும்படி செய்யாவிட்டால் அவற்றுல் கால அளவிலே உலகத்திற்கு எவ்வளவு தீங்கு உண்டாகும் என்பதை விவேகிகள் தமது மனத்தாலேயே சிந்தித்துப்பார்க்கவேண்டும்!

இத்துன்பங்கள் எல்லாவற்றிற்கும் ஏககாலத்தில் பரிகாரங் கிடைக்க வேண்டுமானுல்—சிருஷ்டிகர்த்தாவின் பொது நோக்கம் நிறைவேற வேண்டுமானுல்—பல வகைப்பட்ட அச்சங்கங்களுடையவும் சபைகளுடையவும் தற்காலப் போக்கைத்திருப்பி சிருஷ்டியிலடங்கிய சகல ஜாதியினருக்கும் நன்மை தருவதான வழியில் கொண்டு சேர்க்க வேண்டியது அவசியமாயிற்று.

அந்த அவசியவேலையைச் செய்வதற்காகவும் பிரகிருதிதேவியின் இயற்கை நியமமாகிய ஈசனது அபிப்பிராய ஒழுக்கில் மனிதசமூகத்தைச் சேர்த்து விடுவதற்காகவும் இந்த பிரம்ம நிஷ்டா மடம் சிற்சபையின் ஸ்தாபனமொன்று வேண்டப்பட்டது.

தேவைகளை நிறைவேற்றத் தொடங்குதல்.

இந்த அவசியத்தை முன்னிட்டு பிரம்மநிஷ்டாமடம் சிற்சபையானது சென்ற 22 வருஷங்களாக உழைத்து வந்திருப்பதன்பயனை இது காறும் படித்து வந்த விவேகிகள் அறிய ஆவல் கொள்வது சகஜம். குறித்த பயனை மாத்திரம் விளக்குவதைப் பார்க்கினும் சிற்சபையின் முக்கியமான செயல்களைச் சிறிது குறிப்பிடுவது பொருந்துமாதலால் அதனை இங்கு வெளியிடுகின்றோம்.

1. முன்விவரித்தபடி பிரம்ம நிஷ்டாமடம் சிற் சபையின் ஆரம்ப காலத்தில் இந்தியாவில் ஜாதி யுயர்வு தாழ்வு வகுப்புத் துவேஷக் குழப்பம் பரவி நின்றது. அன்று ஒவ்வொருமதத்தினரும் —ஒவ்வொரு ஜாதியினரும்— ஒவ்வொரு வகுப்பினரும் "சிறுகுழந்தைகள் இந்த விசாலமான பூமண்டலத்தின்கண் சிறு சிறு மணல் வீடுகள் கட்டி அதற்குள் கேட்டுகளிட்டு, இது என் வீடு, அது உன்வீடு, என்று சண்டையிடுவதுபோல" தனித் தனிக் கூட்டங்கள் கூடி சபைகள் ஸ்தாபித்துக் கொண்டு, தம் தம் ஜாதி வகுப்பு நன்மையிலேயே பார்வையைச் செலுத்தி வந்தனர்; ஜாதிகர்வ அட்டகாசமும் உயர்வு தாழ்வுகளைப் பற்றிய வாதங்களும், சாஸ்திரங்களை நீட்டிக்குறுக்கி கண்டன மண்டன கோஷங்கள் செய்து வருவதில் உற்சாகமும் அதில் பிரபலமான பிடிவாதமும் பேயுருவங்கொண்டு தலைவிரித்தாடின. ஒவ்வொரு வகுப்பினரும் தாங்கள்தாம் உயர்ந்தவர்களென்றும் சகல நன்மைகளையும் கௌரவங்களையும் ஏககாலத்தில் பெற்றுக் கொள்வதற்குத் தங்களுக்குத்தான் அதிக பாத்திய மிருக்கின்றதென்றும் அடவாதஞ் செய்தனர். ஆனல் இந்தச் சண்டை காரணமாக பிற்காலத்தின் சமூக நன்மைக்கு

இடமில்லாமற் போவதோடு தங்களுக்கும் நிரந்தர நன்மைகளேற் படாவிருப்பதற்கு வழி செய்து கொள்ளுகின்றோம்" என்ற எண்ணமும் அவர்களுக்குத் தோன்றவில்லை. இந்த நிலைமையில், ஜனசமூகத்திற்கு நன்மை செய்வதே தங்களது ஜாதியின் கடமை, என்று உரிமைகொண்டாடும் ஒருவகுப்பினராக எவரும் முன்வரவில்லையே யென்று நாம் கவலைப்பட இடமில்லையன்றோ?

'சுயநன்மை' என்ற இந்த உத்தேசத்தைப் பிரதானமாக வைத்துக் கொண்டு அதை அடைந்துகொள்வதற்காக அல்லும் பகலும் அனைவரும் முயன்று நின்றனர்.

ஆனால்" ஒவ்வொருவரும் நன்மையடைய வேண்டியதுதான்" நமது விருப்பமும் அவசியமாகும். ஆயினும், அந்த நன்மை ஒருவருக்கும் தீமையாக மாறாமலிருக்க: வேண்டியது அதனிலும் அவசியமாகத் தோன்றுகின்றது! உதாரணமாக சரீரத்தின் பல அங்கங்களும் ஒற்றுமையோடு ஒன்று சேர்ந்து வேலை செய்தால்தான் சரீரத்தின் பொது உத்தேசமாகிய 'சுகம்' எல்லா அவயவங்களுக்கும் கிடைக்கின்றது. அவ்விதம் அவை ஒற்றுமையின்றிமுறையே கைகளும் கால்களும் மூக்கும் கண்களும் காதுகளும் தனித்தனியே நன்மை யடைய வேண்டும் எனக் கிளர்ச்சி செய்து, தம்மைப் போன்ற கைகளையும் கால்களையும் மூக்குகளையும் கண்களையும் காதுகளையும் சகாயத்திற்குச் சேர்த்துக் கொண்டு, "தாம் இனி சரீரத்தின் பொது அங்கங்களாக இருந்து வாழ முடியாது" எனத் தீர்மானித்து, 'தாம் சரீர நியமத்தினின்று பிரிந்து—தனித்து வாழ வேண்டும்' என விரும்புமானால், அவற்றின் கதியையாவது வாழ்க்கை நலத்தையாவது நாம் அதிகம் விவரிக்க வேண்டியதில்லையல்லவா?

அது போல, ஹிந்து சமூக சரீரத்திற்கு உள்பட்ட எந்த வகுப்பாரும் உயர்வு தாழ்வு வாதங்களில் புகுந்து ஹிந்து சமூக சரீரத்தை விட்டுப் பிரிந்து வாழ நினைக்கக் கூடாதென்றும், அவ்வாறு பிரிந்து வாழ விரும்பும் வகுப்பினர் "சரீரத்தின் நியமத் தொடர்பினின்றும் பிரிந்து சுகமாய் வாழவிரும்பும் அங்கங்கள், தமது உத்தேசத்திற்கு விபரீதமான துக்கத்தையே அடைவது போல" வீணான துன்பங்களுக்கு ஆளாக வேண்டியதாகு மென்றும் இந்த சிற் சபைதான் முதன்முதலில் எடுத்துக் காட்டத் தொடங்கிற்று. ஜனங்கள் போலி ஜாதிப் பெருமையில் ஏமாந்து (அல்லது இறுமாந்து) கிடப்பதைத் திருத்தி அவர்களுக்கு உண்மையான ஜாதியின் பெருமையையும் உத்தேசத்தையும் அவற்றை நிறைவேற்றுவதற்கான வழிகளையும் தேச பாஷைகளில் போதிக்க வேண்டுமென நினைத்து, இந்த சபையிலிருந்தும் சில புஸ்தகங்களும் துண்டுப் பிரசுரங்களும் வெளியாயின.

சரீரத்தின் பொது நோக்கமாகிய 'சுகம்' சித்திக்க வேண்டுமானல் சிருஷ்டி நியமத்தை யுணர்ந்து, அதனைப் பின்பற்றி எல்லா

அங்கங்களும் அவ்வவற்றின் தொழில் வாசனை நுட்பத்தை யறிந்து —அவற்றை சுவாதீன அபிமானத்தோடு— (தனது உணர்ச்சியோடு) ஒழுங்காக நிறைவேற்றி வர வேண்டு மென்றும் அது போல, ஹிந்து சமூகத்திலடங்கிய சகல ஜாதியாரும் இன்ன இன்ன முறையில் ஒற்றுமை யுணர்ச்சியோடு தொழில் நடத்திவர வேண்டு மென்றும் விளக்குவதற்காக ஒரு சமூக நலப் பத்திரிகை “மலையாள பாஷையில்” நடத்தப்பட்டது. அந்தப் பத்திரிகையில் முன் தெரிவித்த திருஷ்டாந்தத்தைப் போலவே “இந்தியாவிலுள்ள பல ஜாதித் தொழில் வகுப்பினரும் இந்திய சரீரமாகிய “சமூக சுக வாழ்க்கையை” உண்மையில் விரும்பினால் அவர்களியாவரும் தாம் இந்திய மாதாவினது சரீரத்தின் நன்மையை வளர்ப்பதற்காக் கடவுளால் படைக்கப்பட்ட ஒவ்வொரு, அங்கமென்று உணர்ந்து, தாம் உயர்வு தாழ்வு கருதியோ, அல்லது அகங்காரத்தாலோ, மடமையாலோ, சோம்பல் குணத்தாலோ தமது தொழிலைக் கைவிட்டு அல்லது தம்முடைய இயற்கை வாசனைத் தொழிற் பழக்கத்திற்குப் பொருந்தாத வேறு தொழில்களில் புகுந்து இரண்டையும் செய்ய முடியாத நிலைமையில் வீணே “கௌரவ வாழ்க்கை” என்னும் பெயர் தாங்க விரும்ப வேண்டா மென்றும், அவ்வாறு விரும்புவதும் முயற்சிப்பதும் சமூகத்திற்கு அனர்த்தத்தை விளைத்து அழிவைத் தேடுவதாகு மென்றும் நூற்றுக் கணக்கான யுக்தி நியாய அனுபவ ஆதாரங்களுடன் “பூலோக ஜன சமுதாய சீர்திருத்த வாழ்க்கை முறையை விளக்கும்’ சாஸ்திர மொன்றை இந்த சபை தான் வெளியிட்டிருக்கின்றது. சபையின் முக்கியமான முயற்சிகளில் இதை ஒன்றாகக் குறிப்பிட வேண்டும்.

இவ்விதமாக பூலோகத்தில் வாழ்கின்ற சகல மனிதர்களும் சிருஷ்டி மாதாவின் ஒவ்வோரங்கங்களெனக்கருதி, ஒற்றுமையோடும் ஒழுங்கோடும் அபிமானத்தோடும் வேலைசெய்யவேண்டும், என்ற லக்ஷியத்தில் வேலைசெய்ததால்தான் சபையின் நோக்கம் மிக விரிந்துபோய் விட்டதென்றும் சிலர் குறைகூறி, பலவாறான இடையூறுஞ் செய்ய முயன்றனர்; சபையின் விசால நோக்கத்தைக்கருதி உதவி செய்ய விரும்பினோரையும் தடைசெய்தனர். இங்கு குறித்த காரணங்களால் சபையானது தீவிரமாகத் தனது உத்தேசங்களைப் பிரசாரஞ் செய்து உலகத்தின் பல பாகங்களிலும் அதன் கிளைச்சபைகளை அபிவிருத்தி செய்து பூலோகமெங்கும் இந்த “சமுதாய சரீர அபிமான உணர்ச்சியை” புதிய முறையில் அதிகமாகப் பரவச்செய்ய இயலாது போயிற்று.

ஆயினும், ஒரு தகப்பன் தனது குழந்தைகளின் நல்வாழ்விலேயே கருத்தா யிருப்பதுபேல் “தன்னால் படைக்கப்பட்ட உலகத்தின் நன்மையிலேயே சதாகாலமும் கருத்தா யிருக்கின்ற” ஈசன் இதனைக் கைவிடவில்லை. அவர், தமது ஹிருதய விசாலம் போலும் விலாசமாகி

"சிருஷ்டியிலுள்ள எல்லா மனிதர்களும் ஜீவர்களும் ஒரு சமூக சரீரத்தின் நன்மையை விரும்பிப் படைக்கப்பட்ட பல அங்கங்களைப்போலும் கருதி வேலைசெய்து, அபிவிருத்தி அடையவேண்டும்" என்ற நோக்கத்தை யுடைய இந்த சிற்சபையை வளர் பிறை போல தினந்தோறும் வளர்த்து வரலானார்; அதன்ஞான உபதேச கிரணங்கள்—ஒளிகள்— சூரியனது ஒளியைப்பொலும் எங்கும் தடை யின்றிப் பரவுமாறு செய்தார்: அதனால் இந் நாட்டின் பல பாகங்களிலும் வாழ்ந்து வருகின்ற— குறுகிய கோள்கை யுடையோரின் உள்ளங்களும் மலர்ந்து எங்கும் சமரசப் பொது நோக்கத்தின் மணம் வீசத் தொடங்கிற்று.

முன்னர் இச்சபையின் கொள்கைகளை விஷம் போலும் கருதி வந்த பலரும் இக்கால பக்குவத்தினால் "சிற்சபைகளின் கொள்கைகள் தாம் மனித வர்க்கத்திற்கு அமுதம் போலும் ஏற்கத் தக்கன" என்று தாமே வியந்து கூறி இதில் சேரலாயினர்.

இப்பொழுது சபையின் கொள்கைகளை அங்கீகரித்து பூரண ஆதரவோடு அவற்றைப் பின் பற்றும் பண்டிதர்களும் சாதாரண ஜனங்களுமாக—ஏறக்குறைய இந்தியாவின் பல பகுதிகளிலும்— நிறைந்திருக்கின்றனர்.

இனி, சுவாமிகளின் ஆயுர்வேத ஆராய்ச்சியைக் குறித்து ஒன்று கூறவேண்டியதுண்டு. அதாவது:—

மனித ஜன்மத்தின் உத்தேசங்கள் மிக விரிவாயிருப்பதாலும் —அவை காலஞ் செல்லுந்தோறும் பெருகி நீண்டுகொண்டு போவதாலும்— அந்த உத்தேசங்களை நிறைவேற்றுவதற்கு முக்கியக்கருவியாக அமைந்திருக்கின்ற மனித சரீரத்தின் வாழ்க்கைக் காலத்தையும் "மரணம்" என்ற எல்லையைக் கடந்ததாகச் செய்துவிட வேண்டும் என்பது சுவாமிகளின் உத்தேசங்களில் ஒன்றாகும். ஆகவே, சுவாமிகள் "கடந்த பல வருஷங்களாக" அதற்கான ஆராய்ச்சிகளில் புகுந்து மரணத்தைத் தடுத்து மனித சரீரம் உலகத்திலுள்ள எந்தப் பௌதிகப் பொருள்களாலும் அழிக்க முடியாத— சாசுவத— வாழ்க்கையைப் பெறலாமென்ற முடிவுக்கு வந்தனர்.

அதன் பெருமையையும் ஆராய்ச்சியின் போக்கையும் குறித்து புராதன நவீன சாஸ்திர ஆதாரங்களுடன் தக்க மேதாவிகளடங்கிய சபைகளில் சுவாமிகளாலேயே பல உபந்நியாசங்கள் செய்யப்பட்டுள்ளன. "இந்திய முன்னேற்றக்காரன்" முதலிய ஆங்கிலப் பத்திரிகைகளும் சில வருஷங்களுக்கு முன்னரே இவ்வுபந்நியாச விஷயங்களை வெளியிட்டுள்ளன. அவ்விஷயம் முழுதும் நமது அகஸ்தியன் பத்திரிகையில் இனித் தொடர்ந்து வெளியாகும்.

குறித்தபடி சரீர சித்தியைப் பெறும் வழிகளை ஆராய்ந்து

உலகத்திற்கு அறிவிக்க வேண்டுமென்றே ஸ்ரீ ஸ்வாமிகளால் ஆயுர்வேத ஆராய்ச்சிசாலை யொன்று திறக்கப் பட்டது. அதன் அவசியத்தைக் குறிப்பிடுவதற்காக இங்ஙனம் சுவாமிகளின் ஆயுர்வேத ஆராய்ச்சியை முதலில் கூறவேண்டியதாயிற்று.

ஆயுர்வேத சித்தௌஷதசாலை.

சரீரத்தி லுண்டாகின்ற பலவிதமான நோய்களையும் முற்றிலும் நீக்குவதற்கு நமது புராதன இந்திய- ஆயுர்வேத சித்தநூல்களில் இரண்டுவழிகள் தெரிவிக்கப் பட்டுள்ளன. அவை (1) சோதனம் என்றும் (2) சமனம் என்றும் கூறப்படும்.

1. சோதனம் என்பது அழுக்கும் மெழுகும் படிந்து உருவமே தெரியாதிருக்கின்ற வஸ்திரத்தை முதலில் வெளுக்கச் செய்து, பிறகு சாயம் போடுவது போல கண் காது மூக்கு, மூளை, கண்டம், குடல், சரீர அங்கங்கள் (உடல்முழுதும் ஆகிய) இவைகளில் சேர்ந்து கிடக்கின்ற அழுக்குகளையும் மலங்களையும் அவ்வவற்றிற்குரிய சிகிச்சை முறைகளால் வெளியேற்றி சரீரத்தின் எல்லா அவயவங்களையும் முதலில் பரிசுத்தமாகச் செய்து கொள்ளுதல்.

2-வது சமனம் என்பது, அவ்வாறு சுத்தி செய்யப் பெற்ற சரீரத்தின் கூறுக்கும் வியாதியின் போக்குக்கும் தக்கவாறு ஔஷதங்கள் கொடுத்து நோயை நீக்கிப் பூரண ஆரோக்கியம் அளித்தல்.

இவ்விரண்டு முறைகளையும் நோயாளிகளின் விஷயத்தில் முறையே கையாள வேண்டியது மிக்க அவசியமாகும். இந்தியாவில் பெரும்பாலும் இந்த முறைப்படி முதலில் சரீரம் முழுதையும் —எல்லா அங்கங்களையும் சுத்தி செய்து— அப்பால் நோய் சமனமாக மருந்தளிப்பது என்ற முறை அனுஷ்டிக்கப் படுவதே யில்லை. அவ்வாறு அனுஷ்டியாததால்தான் ஆயுர்வேத வைத்தியர்கள் எத்தகைய ஔஷதங்களை நோயாளிகளின் சரீரத்தில் உபயோகித்த போதிலும் அவை பயன் படுவதில்லை. அழுக்குப் படிந்த வஸ்திரத்தில் எவ்வளவு அழகிய சித்திரங்கள் வரைந்தாலும் அவை பயன் தராதது போல —பிரகாசியாதது போல— மேற்படி மருந்துகளும் பிரயோஜனப் படுவதில்லை.

இக் காரணத்தை யுணராது சில பண்டிதர்களும் —டாக்டர்களும்— ஷ நோய்கள் கர்மத்தால் வந்தன என்றும், அவை கரும அனுபவ கால பூர்த்தியாகிய "சரீர அக்னி புடத்திலேயே" தீர வேண்டுமென்றும் பரிகாரம் (முடிவு) கூறுகின்றனர்! ஆயுர்வேத வைத்தியர்களாயிருப்போரும் இந்த அபிப்பிராயத்திற்கு வருவதற்கேற்ற முறையைக் கையாளும் பொழுது "இந்திய ஆயுர்வேத முறைகள் பயனற்றவை" என்று ஆங்கிலரும் பிறபாஷையினருங் கூறி நகை யாடுவதில் நமக்கொன்றும் விந்தை தோன்றவில்லை.

அந்தக் கொள்கைகளில் மறைந்து கிடக்கின்ற உண்மைகளை விளக்குவதற்காகவே இங்கு நடைபெறுகின்ற ஆயுர்வேத சித்தௌஷத சாலையில் வருகின்ற நோயாளிகளுக்கு "முதலில் முறைப்படி சரீர சுத்தி செய்து" பிறகு தக்க சித்தௌஷதங்களைக் கொடுத்து நோய்களை சமனஞ்செய்து, ஆயுர்வேத வைத்தியர்களாலும் மற்ற பிரபல ஆங்கில வைத்திய நிபுணர்களாலும் கைவிடப் பட்ட கேஸுகளில் பூரண ஜயம் காணப் பட்டிருக்கின்றது. இதற்குப் பல்லாயிரக் கணக்கான நோயாளிகளின் பூரண ஆரோக்யமே சாக்ஷி பகரும்!

ஔஷதித். தோட்டம்.

மனிதர்கள், உணவு பொருள்களின் வேறு பாட்டாலும், சரீர தாதுக்களின் மாறுபாடான இயக்கத்தாலும் எவ்வாறு நோய் வாய்ப் படடுக் கிடந்து வருந்துகின்றனரோ அவ்வாறே, அந்த மனிதர்களின் நோய்களைத் தீர்ப்பதற்காக கடவுளால் படைக்கப் பட்டு பற்பல "உலோக தாதுப் பொருள்களையும் உட்கொண்டு அந்த அந்தப் பொருள்களின் சாரங்களைத் தமது அவயவங்களில் நிறைத்து வைத்துக் கொண்டிருக்கின்ற"—தாதுப் பொருள்களைத் தின்று அவற்றின் சாரத்தை வடிக்கட்டும் யந்திரங்களாக விளங்குவனவாகிய மூலிகைகளும், சீதோஷ்ண மாறுபாடுகளாலும் பிற பூச்சிவர்க்கங்களின் தொல்லைகளாலும் நோயுண்டு மிருதியாகப் பாதிக்கப்பெற்று நிற்பதை யுணராமல், கண்ட மனிதர்கள் அவற்றை நினைத்த காலத்தில் நினைத்தவாறு பிடிங்கி வந்து காசுக்கு ஆசைப்பட்டு கடைகளில் தள்ளி விடுவதும், 'அந்த மூலிகைகள் சவம் போலும், சாரமற்றுக் கிடப்பதையும்' தேவைக் காரர்கள் கவனியாது விலை கொடுத்து வாங்கி வருவதிலுள்ள தவறுகளையும், அத்தகைய நோய் வாய்ப் பட்டுக் கிடந்த மூலிகைகளையும் அரிய பெரிய மருந்துகளில் சேர்த்து அருந்துவதனால் நோயாளிகளுக்கு மேன் மேலு முண்டாகின்ற துன்பங்களையும் விளக்கி பற்பல, துண்டுப் பிரசுரங்களும், மூலிகைகளை எடுத்து வளர்த்து வரும் முறைகளை விளக்குகின்ற ஸ்ரீதர்ம போதினி என்ற புத்தகமும் வெளியாக்கப் பட்டுள்ளன. இதன் ஆதரவில் "தனது வித்துக்களை—விதைகளை— தானே ஆகரிஷித்து (கவர்ந்து)—இழுத்துக்— கொள்வதாகிய அங்கோல விருக்ஷம், நீலக் கொடி வேலி, 'தனது காற்றிலேயே மனிதர்களின் ஆயுளைப் பெருக்குவதாகிய, 'பொன் அமிர்தம்' போமுதம் என்ற திவ்விய மூலிகை. சர்ப்ப விஷங்களைச் சீக்கிரத்தில் அகற்றும் நாகதாளி, ஸ்ரீ ருத்திராக்ஷ விருக்ஷம் முதலிய பற்பல அபூர்வ மரங்களும் மூலிகைகளும் அடங்கிய மூலிகைத் தோட்டமொன்று அமைக்கப் பெற்றிருக்கின்றது.

தர்ம வைத்தியம்.

சரீரத்தின் பிணியினலும் தரித்திரப் பிணியினலும் மிக மனம் நொந்து வருந்துகின்ற கொடு நோயாளிகள் பல்லாயிரவருக்கு இங்கு உணவும் உடையும் கொடுத்து தர்மமாக ஔஷதங்களு மளித்துப் பூரண ஆரோக்கியத்துடன் அனுப்பப்பட்டு வருகின்றனர்.

தாழ்ந்த ஜனங்களைக் கைதூக்கிவிடுதல்.

"இவர்களும் மனிதர்கள்தான்" என்று நாகரிக மனிதர்களால் அங்கீகாரம் பெறுமல் ஒதுக்கி வைக்கப் பட்டு 'ஆதரித்து உதவி யளிப்போரில்லாமல்' பரிதவித்து, ஜன சமூக சுதந்தரமுமின்றி வருந்திக் கொண்டிருந்த ஆயிரக் கணக்கான புலையர், பறையர் முதலிய "தாழ்த்தப் பட்ட ஜனங்களுக்கு" கல்வி அறிவு ஆசார வொழுக்கங்களைப் புகட்ட வேண்டிப் பற்பல பள்ளிக் கூடங்களும் ஆலயங்களும் ஏற்படுத்தி அவைகளில் தேர்ச்சி பெறுவோர்க்கு புத்தகம் உடை முதலியன பரிசளித்து அவர்களும் இத்தேசத்து" பிரஜா சபையில்,, ஸ்தானம் பெறுவதற்கு உரிய சுதந்தரம் பெற்றவர் களாகுமாறு செய்து அவர்களின் அறிவு நாகரீகங்களை வளர்த்திருக்கின்றது.

பஞ்சாயத்து.

ஏழைகளின் பணம் வீணே செலவாகாமலும் வழக்குகள் மேன் மேலும் பெருகி மனிதர்களுக்குள் துர்குணம் பரவாமலும், பொது ஜனங்கள் சாந்தம் சமாதானம் சத்தியம் இவைகளில் நிலைத்து மனத் திருப்தியோடு வாழும்படிக்கும் செய்வதற்காக சபையின் அங்கத்தினரைக் கொண்டு பஞ்சாயத்து சபைகள் ஏற்படுத்தி, மிகச் சிக்கலான கேஸுகள் பலவும் நியாயத்திற்கேற்பத் தீர்மானஞ் செய்யப் பட்டுள்ளன.

சோப் தொழிற்சாலை.

சித்தௌஷத மூலிகைகளின் சத்துக்களைச் சேர்த்து சாஸ்திர முறைப்படி செய்யப்பட்ட, உலகப் பிரசித்தியான சோப்புகள் இங்கு செய்யப் படுகின்றன. இவை சரீரத்திலுண்டாகின்ற வாதம், குஷ்டம், தேமல், பூச்சிக்கடி, பற்று, சொரி, சிறங்கு முதலிய இன்னும் பல ரோகங்களையும் நீக்கத் தக்கன. தோல் சம்பந்தமான வியாதிகளைப் போக்கிப் பூரண சௌக்கியந் தருவதில் இவை சிலாக்கிய மென்று அனுபவஸ்தர்கள் சொல்லிக் கொள்ளுகின்றார்கள்! நம் நாட்டினரின் சீதோஷ்ண தேகக் கூறுபாட்டுக்கிணங்க இவை நாட்டு மருந்துகள் சேர்த்துச் செய்யப் பெறுவதால் இவைகளுக்கு எப்பொழுதும் கிராக்கி அதிகமாகின்றது. பல கண் காட்சி சாலைகளும் அனுப்பியுள்ள நற்சாக்ஷி பத்திரங்கள் "மிகக் குவிந்து கிடக்கின்றது நம் நாட்டில் சிறிது செல்வமுடையோரும் வேலையின்றி வருந்துவோரும் இத்தகைய

தொழில் துறையில் இறங்கி நன்மை பெறலாம்" என்பதை நிரூபிப்ப தற்காகவே இந்தத் தொழிலை தென்னிந்தியாவிலே முதன்முதலில் சாஸ்திரீய முறையாக ஸ்தாபித்து நடத்தி வரப்படுகிறது.

நெசவு முதலிய தொழிற் சாலை.

இங்கு ஏழைச் சிறுவர்களுக்கு கல்வியும் கைத்தொழிலும் இனமாகக் கற்பிக்கப்படுகின்றன.

விவசாயத் தோட்டம்.

விவசாயத்தில் பொது ஜனங்களுக்கு அனுதாபவு உண்டாகி ஜனங்கள் வீணே சோம்பேறிகளாகத் திரிவதைத் திருத்தவேண்டியும் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவு பொருள்களுக்கு வழி செய்துகொண்ட பிறகே பிற தொழில்களில் அவர்கள் பிரவேசிக்குமாறு விவேகிகள் பார்த்துக் கொள்ள வேண்டுமெனும் உணர்வை வலுப் படுத்துவதற்காகவும் சாஸ்திர முறைப்படி பற்பல அபூர்வ விருக்ஷ வர்க்கங்களை வைத்து வளர்த்து வருவதுடன் புதிய ரீதியில் கஞ்சை சாகுபடியும் மடத்தின் ஆதரவில் செய்து காட்டப் படுகின்றது.

உபந்நியாச சபை.

மதம் ஜனசாரம், ஜாதி யொற்றுமை, உண்மைச் சீர்திருத்த அனுஷ்டானம், கல்வி ஒழுக்கம், சுகாதாரம், கர்மம் பக்தி யோகம் ஞானம் இவற்றை சாஸ்திர யுக்தி அனுபவங்களுடன் ஜனங்களுக்கு எடுத்துப் போதிக்கும்படிக்கு உபந்நியாச வகுப்பொன்று ஏற்படுத்தி அதில் தேர்ந்தவர்களை இந்தியாவின் பற்பல இடங்களுக்கும் அனுப்பி வருகின்றது.

உபசபைகள்: மடங்கள்.

சிற்சபையின் உத்தேசங்களை ஆங்காங்கு நிறைவேற்றுவதற்காக இந்நாட்டின் பற்பல பாகங்களிலும் உப சபைகளும் மடங்களும் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

தண்ணீர்ப் பந்தல்.

"ஜனங்கள் காலத்திற் கேற்ற தர்மங்களை யுணர்ந்து செய்ய வேண்டும்" என்ற கொள்கையை நடத்திக் காட்டுவதற்காக கோடை காலங்களில் யாத்திரிகர்களுக்கும் மற்றோர்க்கும் மனங் குளிரத் தக்கவாறு இனிய நீர் இங்கு அளிக்கப் படுகின்றது.

பசு பரிபாலனம்.

பசுக்களை "பாத நாட்டினர் அனுதாபவு செய்ததனாலேயே அவர்க ளது ஆரோக்கியமும் அறிவும் வளர்ச்சியும் ஆயுளும் வரவரக் குறுகத் தொட ங்கிற்று" என்பதை ஜனங்கள் விரைவில் தெரிந்து கொள்ள வேண்டு மென்றும், அவ்வாறு தெரிந்து அவற்றை ஆராதித்து வருவார்களானால்

தேசமும் சுபிக்ஷம் பெறும், அவர்களும் ஆயுளாரோக்ய அறிவு விருத்தியாகப் பெறுவார்கள் என்பதை நினைவுறுத்த வேண்டி, பசு பாலனமும் செய்து வருகின்றது.

புஸ்தகசாலை.

இதில் பற்பல பாஷைகளிலும் சிறந்து விளங்குகின்ற மேதாவிகளால் எழுதப் பெற்ற பல பாஷை நூல்களும் சேகரித்து வைக்கப் பட்டுள்ளன; சேகரித்து வரப் படுகின்றன.

அச்சுக்கூடம்.

இதில் சிற்சபை ஸ்தாபனத்தின் உத்தேசங்களை உலகெங்கும் பரவச் செய்வதற்காக இங்கிலீஷ் தமிழ், மலையாளம், ஆகிய மூன்று பாஷைகளிலும் பற்பல புஸ்தகங்கள் அச்சிட்டு வெளியிடப் பட்டு வருகின்றன. இதினின்றும் இன்றுவரை மலையாள பாஷையில் அச்சிடப் பட்டு வெளிவந்துள்ள புத்தகங்களாவன:—

விக்கிரகாராதனை, தசோபநிஷத்து, ஸநாதன தர்மம், தத்துவ போதம், ஆஹாரமும் ஆரோக்கியமும் அங்கசோதனை வித்தை, சிவ தத்துவ சுதாநிதி முதலியனவாம் இவைகளன்றி மலையாள பாஷையில் "சதானந்த விலாசம்" என்ற பத்ரிகையும் நடத்தப் பெற்றுள்ளது. தமிழில் ஸ்ரீ தர்ம போதினி சந்தான ரத்தினம் என்ற புஸ்தகங்கள் வெளி வந்துள்ளன.

உலக நன்மையைக் குறித்து இனி அச்சிடுவதற்குத் தயாராகவுள்ள புஸ்தகரத்தினங்கள்.

ஸ்ரீசுவாமிகள் பூலோகத்தின் நல்வாழ்வை விரும்பி சமாதியில் கண்ட தீர்க்க தரிசனங்கள், ஞான உபதேசங்கள், ஆராய்ச்சிகள், உலகத்தின் வருங்காலச் சீர்திருத்த முறைகள் அரசர்கள், "வேதம் போலும் படித்து, இனி உலகத்தை எளிதான உபாயங்களால் சமாதான முறையோடு ஆக்ஷிபுரியும்" வழிகள், உலகத்திலுள்ள பற்பல ஜாதியினரும் மதத்தினரும் சகோதர நட்பு முறையில் ஒழுக வேண்டிய அறிவைப் புகட்டும் நியாயங்கள், மனிதர்கள் தரித்திரமில்லாமல் வாழும் வழிகள், கல்வி சுகாதார முறையில் நிகழவேண்டிய சீர்திருத்தங்கள் இவை நிறைந்த "ஜனஸமுதாய சீர் திருத்த சாஸ்திரம்" பல படங்களுடன் அச்சிடுவதற்குத் தயாராயுள்ளது. இவ்வாறே ஸ்வாமிகள் லோகோபகாரத்தைக் கருதி கர்மம், பக்தி, யோகம், ஞானம் இவற்றின் நுட்பங்களைக் குறித்து சிறுவர் சிறுமியர்கூட படித்து மகிழும்படி உவமானக் கதை உருவமாய் எழுதியுள்ள 'உபதேச மலர்க்கொத்து' 200. இந்த இரண்டு புஸ்தகங்களும் வெளியானால் இந்தியாவின் புராதன ரிஷிகளின் வாழ்க்கை மணம் எங்கும் கமழும். மனிதர்களுக்குள் பரஸ்பர ஒற்றுமை செழித்தோங்கும். மிருக வர்க்கங்களும் மத்சர மின்றி வாழத் தொடங்கும். உபகார சிந்தைகள் எங்கணும் வியாபிக்கும். கிருதயுகம் போல் இவ்வுலக வாழ்க்கைமுறை

கடைபெறும். இந்த நூற்றுண்டிலே வாழ்கின்ற நாகரிக மனிதர்களுக்கு இவ் விரண்டும் மூவாமருந்தெனக் கூறுவதில் "தேவர்களுக்கு மாத்திரம் பொருமை ஏற்பட" இடமுண்டு. அவர்கள் இத்தருணத்தில் மனிதராகப் பிறவாதகுற்றம் நம்முடையதில்லையன்றோ? என்று இவற்றைப் படிப்போர் பிற்காலத்தில் நினைப்பதை நாம்இன்றே கூறி விடுகின்றோம்.

ஆத்மோத்தாரணம்.

இனி அந்த தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் ஒருங்கே திருப்தியளிக்க க்கூடிய நூல் இம் மூன்றுவதாகும். உலகத்திலுள்ள மதங்களிலெல்லாம் மிகப் புராதனமானதும், ஜீவர்களின் பக்குவத்திற்கேற்ப சகல படிகளும் அமைக்கப் பெற்றதும், பரிபூரணமான நியாயப் பிரமாண அனுபவ ரகசியங்கள் மலிந்ததுமாகிய நமது ஹிந்து மதத்தில் இப்பொழுது வாழ்ந்து வருகின்ற "சகல ஜாதியினர்க்கும்— ஆண் பெண் அனைவர்க்கும் மனப் பூர்த்தியான மதாசார சுதந்திரங் கொடுத்து, அவர்களின் உலக சம்பந்தமான நன்மைகளையும் ஆத்ம சம்பந்தமான சுத்திகளையும் ஒருங்கேயடைந்து நித்திய சந்தோஷத்துடன் வாழும் வகையை கூறுவது இந்த சாஸ்திரமேயாகும். யுத்தியும் அனுபவமும் புராதன நவீன சாஸ்திரமுறைப்படி ஆத்மாவினிடத்து உண்டாகின்ற மேன்மைகளும் இதனில் தாராளமாக எடுத்தாளப் பட்டுள்ளன. "வேதாகமங்கள் உபநிஷத்துகள் முதலிய ஹிந்து மத நூல்களின் சாரம் இதிலடங்கியது" என்று, ஒரே மொழியில் கூறிவிடுவதே சரியாகும். இனி, ஹிந்துமதத்தில் சேர்ந்து ஹிந்துமதத்தின் ஞான ஸம்ஸ்காரங்களை (அறிவின் மூலமாய் ஜீவாத்மாவினில் அமைகின்ற சக்திகளைப்) பெற்று மேலான நிலைமையை யடையவிரும்புவோர்க்கும், அவர்கள் எந்த தேசத்தினராயினும்— அவர்களது பக்குவத்திற்கேற்ப பக்தி ஞான அப்பியாச முறைகளால் பரிசுத்தப் படுத்தி அவர்களையும் "வேத சம்மதம் பெற்ற ஹிந்துக்களாகச் சேர்க்கும் வழிகள்" இதில் விருதியாகத் திறக்கப் பட்டுள்ளன. இந்த வாயில்களின் வழியே மனிதவர்க்கம் பூராவும் ஹிந்து மதக் கோட்டைக்குள் பிரவேசித்து, மத விஷயங்களில் (தம் பக்குவத்திற்குப் பொருந்தியவாறு) சம சுதந்திரம் பெறலாம்! "பல வகைப்பட்ட அங்கிகள்— ஞான கவசங்கள்— இங்குதயாரிக்கப் பட்டுள்ளன. தமது அங்கங்களுக்குப் பொருந்தியவாறுள்ள அங்கிகளை எடுத்துக் கொள்ள வேண்டியது அணிவோர்களின்கடமை!

ஸ்ரீ ராஜ ராஜேசுவரி மந்திர வித்தியாலயம்.

இக்காலத்தில் பல ஜனங்களும் மாந்திரிகர் வாயிலாகத் தமது பற்பல அபீஷ்ட சித்திகளையும் அடைவதற்காகப் பலவாறு முயலுகின்றனர்; சிலர் உயிர்ப்பலியிடுதல் முதலிய தீய காரியங்களுக்கும் உடன்படுகின்றனர். எவ்வாறேனும் தமது கோரிக்கைகள்

நிறைவேற வேண்டு மென்று நினைக்கின்றனர். தற்காலம் நோக்கும் பொழுது மேற்படி ஜீவஹிம்சையோடு செய்கின்ற மாந்திரீக முறைகளால் நன்மை யுண்டாவது போல் தோன்றினும், அவை வெகு சொற்பகாலத்திற்குள் தமது சக்தியையும் இழந்து, மேற்படி ஜீவஹிம்ஸையினால் ஏற்பட்ட பாவத்தையும் பன்மடங்கு திரும்பக் கொண்டு விடுகின்றன. இத்தகைய கொடிய வழிகளால் மாரணம், மோஹனம், ஸ்தம்பநம், உச்சாடனம், வித்துவேஷணம் முதலிய காரியங்களைச் செய்வோர் அதிகரித் திருப்பதைத் தடுக்க வேண்டியும், ஜீவ ஹிம்ஸையே சிறிதுமின்றி மாந்திரிக சாஸ்திரங்களில் ராஜ மார்க்கமாகத் தெரிவிக்கப் பட்டுள்ள வழிகளைக் கொண்டு இந்த மந்திர வித்தியாலயத்தில் சகல ஜனங்களுக்கும் அவரவர் கோரிக்கைகள் பூர்த்தி செய்யப் படுகின்றன. "தெய்வம் யந்திரத்திற்குக் கட்டுப்பட்டது" என்பதுபோல, மந்திர யந்திர சாஸ்திர முணர்ந்து யந்திரங்களுக்குச் சக்தி யுண்டாக்குவதனால் அபாரமான காரியங்கள் சித்தியாகின்றன. ஆகாய விமானம் கிடைக்குங் காலத்தில் கட்டை வண்டியில் போய்க் கஷ்டப் படவேண்டுமென்று ஒருவரும் விரும்பாதது போல, இந்த ராஜ ராஜேசுவரி வித்தியாலயத்தின் மகிமையை அறிந்தவர்கள் முற்கூறிய ஜீவ ஹிம்சை வழியாகிய கட்டைவண்டிகளில் சென்று நீண்ட காலமும் கஷ்டமடைய விரும்பார்களென்பது திண்ணம். இங்கு பில்லிசூனியம், பேய், பிசாசு, கிருகதோஷம், வைத்தியம் முதலியவைகளுக்குப் பரிகாரத் தகடுகள் யந்திரங்கள் எழுதி மந்திர சித்தி செய்து கொடுக்கப் படுவதுடன் அவரவர் விரும்பிய காரியங்கள் சித்தியாகவும், செல்வ விருத்தி சந்தான சித்தி முதலிய காரியங்கள் கைகூடவும் பலவித யந்திரங்கள் செய்து கொடுக்கப் படுகின்றன. ஹிந்துக்களின் சாஸ்திரப் பெருமையையும் "பற்பல காரியங்களை விரும்பியவர்களின் எண்ணங்களை யந்திரங்களில் கொண்டு சேர்ப்பதாலுண்டாகின்ற மந்திரத்தினுடைய ஜீவ சக்தியையும்" விளக்குவதற்காகவே இந்த மந்திர வித்தியாலயம் ஸ்தாபிக்கப்பெற்றது.

ஸ்ரீ அகஸ்தியாசிரமம்.

மனித வாழ்க்கையில் காணப் படுகின்ற விருப்பங்களை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து நோக்கினால் அவை இரண்டு பகுதியில் அடங்கும். இத்தப் பரிபாஷையை இன்னும் சிறிது விளக்கிக் கூறுவதென்றால் அவை

"சித்தி, முக்தி" என்ற இரண்டுகள்தாம், என்று சொல்ல வேண்டும். மனித ஜீவிதம் முழுதும் நினைத்துப் பார்த்தபோதிலும் இந்த இரண்டைத் தவிர்த்து மற்றொன்றும் காணப் படாமையால் இவ்விரண்டையும் ஒருங்கே யடைந்து தம்மை வழி படுவோர்க்கெல்லாம் அத்தகைய சித்தியை அளிக்கும் அருள் மூர்த்தியாய் விளங்குகின்ற சித்தர்களின் தலைவராகிய ஸ்ரீ அகஸ்திய பகவானையும் லோபாமுத்திரைத் தேவியாரையும் இங்கு ஸ்தாபித்து, முக்காலமும் அபிஷேக அர்ச்சனை ஆராதனைகள் செய்து வரப் பெறுகின்றது. மனித கோடிகளின் நல்வாழ்வுக்கான மார்க்கங்களை விளக்கிப் பூர்த்தி செய்துள்ள ஸ்ரீ அகஸ்திய பகவானை மனிதராகப்பிறந்த யாவரும் இங்கு வந்து தரிசித்து இன்பம் பெறலாம்.

ஸ்ரீ ஸ்வாமிகளின் சங்கற்பத்தின்வண்ணம் பிரம்ம நிஷ்டா மடம் சிற்சபையின் முயற்சிகள் இங்கு செழித்தது போல அந்த இலங்கை நாட்டிலும் செழிக்கச் செய்ய வேண்டுமென்பது "அங்குள்ள அபிமானிகளின்" விருப்பம். ஆகவே, அதனை சுவாமிகள் இந்தியாவில் நிறைவேற்றியுள்ள முறைகளை அன்பர்களுக்கு இப்பொழுது கூறி விட்டால், இனி ஸிலோன் யாத்திரையில் நிகழ்ந்த முயற்சிகளை அதிகம் விவரிக்க வேண்டாமென்றும், முக்கியமான சம்பவங்களை மட்டும் இனித் தெரிவித்தல் உசிதமாகுமென்றும் கருதி இவ்வளவுதூரம் விவரிக்கலானோம்.

கொழும்பு யாத்திரை.

23–10–21ல் ஸ்வாமிகள் மதுரையிலிருந்து கொழும்புக்குப் பிரயாணமாயினர். ஸ்வாமிகளின் விஜயத்தை யறிந்த பிரபுக்கள் பலர் மருதானையில் ஸ்வாமிகளை நல்வரவேற்று உபசரித்து ராமலால் சத்திரத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கு வந்திருந்த கனவான்களில் முக்கியமாக அரு. அரு. சோம முதலான பெரிய கடை ஏஜண்டுகளையும், குருசாமி நாடார் முதலான பிரபலஸ்தர்களையும் குறிப்பிடவேண்டும். இந்தப் பிரபுக்களின் மூலமாக ஸ்வாமிகளின் விஜயத்தை யுணர்ந்த ஜனங்கள் அடிக்கடி வந்து தரிசித்துச் சென்றனர். வருகிற கனவான்களுடன் வழக்கம் போல் சுவாமிகள் ஞான சம்பாஷணைகளையும் அரிய பெரிய ஆராய்ச்சி நுட்பங்களையும் கேள்வி விடைகளால் விளக்கி வந்தனர். கொழும்பில் நகரத்தார்களின் ஆதரவிலும் ஸ்ரீ விவேகானந்த சபையின் சார்பிலும் பல பிரசங்கங்கள் நடைபெற்றன. பிரசங்க விஷயங்கள்:— "ஹிந்து மதம்" "விக்கிரகாராதனை" "மானிட ஜன்மத்தின் உத்தேசம்" "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" "சமுதாய சாஸ்திரம்" "மரணத்தைத் தடுத்தல் – தேவத்துவ சித்தி" "யோகத்தால் மரணத்தைத் தாண்டும் முறை" "புநர் ஜன்மம்" "பக்தி யோகம்" "கல்வியும் கைத்தொழிலும்" "விதியும் மதியும்" "சமயமும் ஆசாரமும்" "ஜீவ காருண்யம்" "இந்து சமயத்தின் முற்கால நிலைமை" "இந்து சமயத்தின் தற்கால நிலைமை" "மேல்நாட்டுக் கல்வியின் பூரண நிலைமை" "கீழ்நாட்

டுக் கல்வியின் பூரணமின்மை" "இந்து தேசக் கல்வியின் பூரணமின்மை" என்ற விஷயங்களைப்பற்றி புராதன நவீன சாஸ்திர ஆராய்ச்சியுடன் சுவாமிகள் செய்த பிரசங்கத்தை கொழும்பு நகர்வாசிகள் மிகமிகப் பாராட்டினர். ஜனங்களின் உற்சாகத்திற்கு அளவில்லை.

சுவாமிகளின் உபந்நியாசங்களை கொழும்பு நகரில் நன்கு நடைபெறுமாறு உற்சாகத்துடன் உதவி செய்த ஸ்ரீமான்களை இங்கு நாம் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. ஸ்ரீமான் அரு. அரு. சோம. சோமசுந்தரம் செட்டியாரவர்களின் ஏஜண்டு ராஜ ஸ்ரீ அண்ணாமலை செட்டியாரவர்களின் சிறந்த பக்தியையும் உதார குணங்களையும் நகரத்தார்களின் முறையில் அவர்கள் சுவாமிகளின் தர்ம ஸ்தாபனத்தின் மீது வைத்துள்ள பேரன்பு ஆதரவுகளையும் முதலில் குறிப்பிட வேண்டும். அகஸ்தியனது உத்தேசங்களையறிந்து உண்மையன்போடும் ஊக்கத்தோடும் விடாமுயற்சி செய்து பத்திரிகையின் முன்னேற்றத்தைப் பல வகையிலும் அறிந்து உதவிசெய்த ஸ்ரீமான் மெ. மு. அரு. அண்ணாமலை செட்டியாரவர்களின் அபிமானத்தை நாம் என்றும் பாராட்டவேண்டும். ஸ்ரீமான் மெ. சித. ராம. ஏஜண்டு ராஜ ஸ்ரீ ராமசாமி செட்டியாரவர்களின் பேரன்பையும் தர்ம சிந்தையையும் எவர்களும் சிலாகிப்பார்களென்பதி லையமில்லை.

சிற்சபையின் உத்தேசங்களைச் சிறிது உணர்ந்தவுடன் பிரோக்டர் ஸ்ரீமான் பெருமாள் பிள்ளை எடுத்துக் கொண்ட விடாமுயற்சிகளை நினைக்க நினைக்க நமக்கே விந்தைதோன்றுகின்றது.

ஒவ்வொரு தொழிலிலும் கல்வியிலும் தேர்ச்சி பெற்றவர்களுக்கே அதன் வாசனை யறியும் திறமையும் அதிகமாகக் காணும் என்பது போல, பிரோக்டர் பெருமாள் பிள்ளைக்குப் பொதுஜன முன்னேற்றத்திலுள்ள பேராவலையும், அதனைப்பற்றிப் பேசும்பொழுது அவருக்கு உண்டாகின்ற ஆனந்தத்தையும் சிந்திக்கும் பொழுது, இத்தகைய தீவிர வாசனையுடைய சுருசுருப்பான முன்னேற்றக் காரர்கள் ஒவ்வொருதேசத்திலும் விருத்தியாகும்படி செய்ய வேண்டியதைத் தவிர்த்து நாம் உலகத்தைச் சீர்திருத்த வேண்டிய பாகம் ஒன்றுமே யில்லை என்ற முடிவுக்கு வரவேண்டி யிருக்கின்றது. "இராமனுக்கு முன் லக்ஷ்மணன்" என்பது போல் சுவாமிகளின் உத்தேசம் "உலக முன்னேற்றந்தான்" என்பதையறிந்த பெருமாள் பிள்ளை, இளைய பெருமாள் போல (ஸ்ரீ ராமனது விருப்பத்தையே தனது விருப்பமாகக் கொண்டு உழைத்த லக்ஷ்மணன் போல) எங்கும் சுவாமிகளுடைய பிரசங்கங்கள் தங்கு தடையின்றி நடைபெறுவதற்கு பக்க உதவியாக விளங்கினர்.

"விருப்பம் நல்லதானால் வேண்டியன செய்ய, உதவிக்கு ஆளுண்டு" என்ற பழமொழிப்படி பெருமாள் பிள்ளை முதலிய அன்பர்களின் அபிப்பிராயப்படி சுவாமிகளின் உத்தேசங்களை மனப் பூர்வமானப் பிரசாரஞ் செய்ய வேண்டும் என்ற தீர்மானத்திற்கு வந்த ஸ்ரீமான் ஏகாதிபத்ய

பாங்கு காரிய கர்த்தா ஸ்ரீமான் சொக்கநாதன் அவர்கள் சமய சஞ்சீவியாக நின்று உதவிபுரிந்தார் என்பது மிகையாகாது. ராஜஸ்ரீ பிரோக்டர் முருகேசு அவர்களின் பொதுநலவிருப்பம், இவர்களின் நன் முயற்சிகளுக்குப் பக்கபலமாக நின்றுகொண்டது.

செந்திலாறுமுகன் திருவருளால் சிறந்த கல்விச் செல்வமும் பொருட் செல்வமும் அருட் செல்வமும் ஒருங்கே யமையப் பெற்ற ஸ்ரீமான் செந்திலாறுமுகம் பிள்ளை யவர்கள் ஸ்வாமிகளின் திருத்தொண்டில் தம்மைத் தவிர்த்து மற்றுள்ளோர்க்குச் சிறிதும் பங்கு கொடாமல் உடல் பொருள் மனம் யாவற்றையும் உதவி புரிந்து சுவாமிகளுக்கு சமய சஞ்சீவியாக விளங்கினர்.

லைஸன்ஸ் ஸர்வேயர் ஸ்ரீமான் S. ஸபாரத்தினம் அவர்களும் சாண்டில்பாய் ஸ்ரீமான் வேலுப் பிள்ளை அவர்களும் சிற்சபையின் உத்தேச காரியங்களை நிறைவேற்ற விரும்பி சுவாமிகளுடன் பற்பல இடங்களுக்கும் தொடர்ந்து வந்து உதவி செய்தனர். சற் காரியங்களில் சிறிதும் பின் வாங்காமல்—சலியாதுழைக்கும் குணம் படைத்த ஸ்ரீமான் T. S. R. நாயுடு அவர்களின் நற்செயல்களை நாம் எவரும் மறைப்பதற்கில்லை.

இம்பீரியல் பாங்கு காரியம் ஸ்ரீமான் முத்துத் தம்பி அவர்கள் அகஸ்தியன் பத்திரிகையின் நோக்கத்தை மிகவும் வியந்து அதனைப் பரவச் செய்வதில் பெரிதும் சகாயம் புரிந்தார். பரோபகாரமே இயல்பாகக் கொண்டவர்களுக்கு அத்தகைய செயல்கள் சகஜமாயிருக்கின்றன!

பொது நன்மையில் ஈடுபட்டுழைத்த இந்நல்லோர்களின் வரிசையில் ஸ்ரீமான் அ. ச. ஷண்முகம் செட்டியாரவர்களும், அவர்களது காரியநிர்வாககாராகிய பத்மநாபபுரம் ஸ்ரீமான் நாராயண பிள்ளை அவர்களும் தமது பரோபகாரச் செயல்களால் சேர்ந்து கொண்டனர்.

இவ்வாறாக ஸ்ரீராம பிரானுக்கு தேவர்கள் பக்கபலமாக அமைந்து உதவியது போல் இந்நல்லார் யாவரும் சுவாமிகளின் தர்ம உத்தேசங்களை நிறைவேற்றுதற்குத் தக்க உதவியாக நின்று கொழும்பு யாத்திரையைச் சிறப்பித்தனர்.

உள்நாடுகளுக்குச் செல்லுதல்.

கொழும்பில் நடைபெற்ற விஷயங்களை யறிந்த உள்நாட்டு வாசிகளும் கண்டி, யாழ்ப்பாணம், முதலிய இடங்களிலுள்ள சில பிரபுக்களும் சுவாமிகள் ஆங்காங்கு விஜயம் செய்ய வேண்டுமென ஆவல் கொண்டனர். அதனைப் பூர்த்தி செய்வதற்காக சுவாமிகள் நீர்கொழும்பு சென்றனர். பக்தியிற் சிறந்த நகரத்தார்கள் தமது இயற்கைக்கேற்ப சுவாமிகளை அன்புடன் வரவேற்றனர். அங்கும் பல உபந்நியாசங்கள் செய்யப் பெற்றன. ஸ்ரீமான் கா. சுனா. வெ. வேலாயுதஞ் செட்டியார.

வர்களும், ராஜஸ்ரீ கருப்பயா முதலியார் அவர்களும் நீர் கொழும்பில் சிரத்தையெடுத்துக் கொண்டு சுவாமிகளின் உபந்நியாச முதலிய விஷயங்களுக்குப் பலவகையிலும் உதவி செய்தனர்

அப்பால் மாதம்பை ரத்தினபுரி ரிக்வான் இவைகளுக்குப் பிரயாணமாகி, ஆங்காங்கு உபந்நியாசங்கள் செய்யப்பெற்றன. ரிக்வானில் எதிர் பாராத கூட்டம் கூடி யிருந்தது ஆச்சரியகரமாகும். அவ்வூரில் முன்னர் நடை பெற்றுவந்த ஓர் சபைக்கு சுவாமிகளின் விஜய ஞாபகார்த்தமாக சுவாமிகளின் பெயரிட்டனர்.

பின்னர் கண்டிக்குச் சென்று அங்கு சில பிரசங்கங்கள் செய்யப் பெற்றன.

அங்கு ஸ்ரீமான் அரு. வெ. செவு. கா. சுப்பிரமணியஞ் செட்டியாரவர்களும் ஸ்ரீமான் S. சிவஞான சுந்தரமவர்களும், மிக்க உற்சாகத்துடன் வேண்டிய உதவிகள் செய்தனர். ஓவர்வியர் ஸ்ரீமான் சபாரத்தினம் அவர்கள், அவ்விருவரது முயற்சிகளுக்கும் சகாயமாக இருந்தார். ஸ்ரீமான் சிவஞான சுந்தரம் அவர்கள் கண்டியில் மட்டுமன்றி பற்பல வெளியூர்களுக்கும் சுவாமிகளுடன் வந்து பேருதவி புரிந்தார்.

கண்டியில் பிரசங்கங்கள் முடிந்த பின்னர் சுவாமிகள் அங்குள்ள "பிரிட்டானியா கார்டன்" என்ற உலகப் பிரசித்தி பெற்ற காக்ஷி வனத்திற்கு சென்று பார்வையிட்டனர். அங்குள்ள அற்புதமான காக்ஷியையும், அத்தத் தோட்டத்தை அக்கரையுடன் வளர்த்து வருவதில் அதிகாரிகள் வைத்துள்ள சிரத்தையையும் சுவாமிகள் மிகப்பாராட்டி தமது ஆசிரமத்திலுள்ள மூலிகைத்தோட்டத்திற் கென்று சில அபூர்வ விருக்ஷ மூலிகை வர்க்கங்களையும் விலைக்கு வாங்கிக் கொண்டனர்.

அப்பால் கடுகனுவ சென்று அங்கும் ஓர் பிரசங்கம் செய்து மாத்தலைக்குச் சென்றனர். கடுகனுவில் இயற்கையிலே மிகுந்த பக்திமானும் பரோபகாரியுமாகிய ஸ்ரீமான் க. செ. முத்தைய செட்டியாரவர்கள் சுவாமிகளின் கைங்கரியத்தில் மிகவும் ஈடுபட்டு விளங்கினர். அவரது நற்குணங்களைப் பன்முறையும் பாராட்ட வேண்டும்.

மாத்தலை சென்றவுடன் அங்குள்ளோர் சுவாமிகளை மிகுந்த பக்தி விசுவாசத்துடன் ஆராதித்து, அவ்வூரில் ஓர் சிற்சபையும் ஸ்தாபித்தனர். அங்கு உற்சாகத்துடன் உதவி புரிந்தவர்களில் பிரோக்டர் ஸ்ரீமான் அரிய நாயகத்தை முதன்மையாகக் கருத வேண்டும். ஸ்ரீ அரிய நாயகம் தமது பெயருக்கேற்ப குணங்களும் கல்வி யொழுக்கங்களும் நிறைந்த ஒரு கண்ணியவான். அவரது உதவி சிற்சபைக்கு ஏற்பட்டது. "அதன் அபிவிருத்திக்கு நல்ல அறிகுறி" யாகும். அதுபோலவே அவருக்கு இரண்டு நல்ல சகாக்கள் சபையின் நன்மைக்காகத் தோன்றியிருப்பதைக் குறிப்பிடாமல் விடுவதற்கில்லை. அவர்கள் முறையே ஸ்ரீமான் பொன்னுசாமி அவர்களும் ஸ்ரீமான் ஷண்முக ராஜா அவர்களுமாவர். இதன்மேல் சுவாமிகள் யாழ்ப்பாணத்திற்கு விஜயமாயினர்.

யாழ்ப்பாண விஜயம்.

யாழ்ப்பாணம் சென்றவுடன் அங்குள்ள பருத்தித்துறை வண்ணார் பண்ணை என்ற இரண்டு இடங்களிலும் சுவாமிகள் முக்கியமான பிரசங்கங்கள் செய்து அப்பால் கீரிமலை சென்று ஸ்ரீமான்களான K. V. மார்க்கண்டம், K. V. சுப்பிரமணியம் அவர்களின் மடத்தில் தங்கினார்கள். சுவாமிகளிடம் சரீரப்பிணியையும் மனப்பிணியையும் நிவர்த்தி செய்து கொள்வதற்காக வந்த எல்லா ஜனங்களுக்கும் எல்லா விதத்திலும் வேண்டிய வசதிகளை ஸ்ரீமான் K. V. சுப்பிரமணியம் அவர்களே செய்து கொடுத்தனர். இலங்கை நாட்டில் பிரபல வர்த்தகர்களும் முறையே தனத்தாலும் தர்மத்தாலும் சிறந்து விளங்குபவர்களுமாகிய K. V. மார்க்கண்டம், K. V. சுப்பிரமணியம் இருவர்களையும் பலரும் நன்கறிவர். அவர்கள் விருப்பப்படி சுவாமிகள் கீரிமலையை வாசஸ்தானமாக வைத்துக்கொண்டு அங்கிருந்து நல்லூர், சிவியாதெரு, அளவெட்டி, மானிப்பாய், காங்கேசன் துறை, உடுப்பிட்டி, கரவெட்டி, கட்டுடை, சுந்தரோடை, காரைத்தீவு முதலிய பல இடங்களுக்கும் சென்று முறையே "மானிடப்பிறப்பின் பயன்" "மறுபிறப்பு" "இந்துக்களின் குடும்ப வாழ்க்கை" "கல்வி" "சமயம்" "குருலிங்க சங்கம்" "பக்தி" "மானிடஜன்மத்தின் உத்தேசம்" "சிற்சபை" என்ற விஷயங்களைப்பற்றி பிரசங்கங்கள் செய்தனர்.

இனி, பக்ஷிகளுக்கும் பரம தர்மிஷ்டராய் விளங்கிவந்த ஒரு தர்மப்பிரபுவையும் அவரது குமாரரையும் இத் தருணத்தில்ஞாபகப்படுத்தவேண்டும். அவரது பெயர் யாழ்ப்பாண வாசிகளுக்கு நன்கு தெரியுமாயினும் அவரது ஜன்ம பூமியாகிய இந்திய நாட்டு சகோதரர்களுக்கு அவர்களின் தூய்மையான தர்மச்செயல்களை அவசியம் தெரிவிக்கவேண்டும். அவர் புதுக்கோட்டை ராஜ்யத்தைச் சார்ந்த கடியாபட்டி என்ற ஊரில் பிறந்தவர். அவர் பெயர் ஸ்ரீமான் கு. வெ. வெங்கடாசலம் செட்டியார் என்று மட்டும் சாதாரண மனிதருக்குத் தெரிந்திருக்கலாம். அவரது தர்மத்தைக் கவனிக்கும்பொழுதோ இந்திய தேசவாசிகளனைவர்க்கும் அவருடைய ஞாபகம் என்றும் இருந்துவரும். ராமேசுவரம் முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களில் அவர் பல தர்ம ஸ்தாபனங்களை ஏற்படுத்தியிருக்கின்றார். அவற்றில் முக்கியமாக அவர் ராமேசுவரம் ரயில்வே ஸ்டேஷனில் இந்தியா யாத்திரிகர் யாவருக்கும் நன்மை தரும்படிக்குக் கட்டியிருக்கின்ற பிளாட்போரம் கட்டிடத்தை முதலாவதாகத் தெருவிக்க வேண்டும். ஸ்ரீ வெங்கடாசலஞ் செட்டியார் இறந்த தினத்தன்று "ஊரும் அழுதது; காக்கைகளும் அழுதன!" என்று, பொதுஜனங்கள் பேசிக்கொண்டனராம். இதனால் ஸ்ரீ வெங்கடாசலஞ் செட்டியார் "மனிதர்களிடத்தில் அன்பு பூண்டு ஆகார முதலியன தர்மமாக அளித்துப் பரிபாலிப்பது போல, பக்ஷிஜாதிகளுக்கும் அவர் பகல்தவிருது பசியாற்றி வந்தார்,

என்று தெரிகின்றது. அதனால்தான் "அக்கல்லணைப்போல் இனித் தமது பசியாற அன்னமளிப்போர் இலரே" எனக்கருதிக் காகங்களும் கரைந்தன என்று சொல்ல வேண்டும்.

"புலிக்குப் பிறந்தது பூனையல்ல" என்பதுபோல, ஸ்ரீ வெங்கடாசலஞ் செட்டியாரின் குமாரரும், அவரது தர்ம குணங்கள் யாவும் அமைந்தவருமாகிய ஸ்ரீமான் காசிச் செட்டியாரை எவரும் பாராட்டாமலிருப்பது அரிது. நமது காசிச் செட்டியார் இவ்விளம் பருவத்திலேயே முதிர்ந்த ஞானத்தோடும் சிறந்த பக்தி யொழுக்கங்களோடும் விளங்குவது அவருடைய நுட்பமான புத்தியையும் புண்ணிய விசேஷத்தையுமே வெளியிடுகின்றது.

அறிவும் செல்வமு முடையயார் பலர் பல நாடுகளில் இருந்தாலும் அவை நற்செயல்களில் பயன் பெறத் தக்க புண்ணிய முடையார் சிலரே யாவர். இது உலகின் இயல்பு. அதனாலேயே செல்வத்தைப் பற்றிக் கூறும் பொழுது ஒரு பெரியார் "செல்வமானது புண்ணியத்தாலுமுண்டாகும்; பாவத்தாலும் விருத்தியாகும்; புண்ணியத்தாலும் குறையும்; பாவத்தாலும் குறையும்" என்று மறை பொருளாகக் கூறினார். அதாவது:— ஒருவரிடத்துள்ள செல்வமானது மீண்டும் புண்ணியச் செயல்களின் மூலமாகச் செல்லுமானால் அது புண்ணிய கர்மத்தாலும் புண்ணிய வாசனையாலும் சம்பாதிக்கப் பட்டதென்றும், அது பாவச்செயல்களுக்கே பெருவிருப்பத்தோடு செல்லுமானால் அது பாவச்செயல்களின் வாயிலாய் சம்பாதிக்கப்பட்டதென்றும் தெரிந்து கொள்ளவேண்டும் என்பது பொருள்.

இந்த முறையில் நமது காசிச் செட்டியாரவர்களின் செயல்களைச் சீர்தூக்கி நோக்கும் பொழுது "மனிதவர்க்கம் யாவும் மேன்மை பெற்றுய்யவேண்டும்" என்ற ஈசனது திருவுளம் போலும் விசாலமான கொள்கையில் அமைந்துள்ள நமது சித்சபையின் நோக்கங்களிலேயே அவரது ஊக்கமும் உற்சாகமும் செல்வதால் அவரது தூய்மையான குணங்களை மற்றவர்களும் அறிந்து ஆனந்தங் கொள்வார்களென்று நம்புகிறோம். சிறிய வயதில் பெரிய உத்தேசத்தோடு பொது நன்மையில் ஈடுபடுகின்ற இந்த தர்மசீலர்க்கு எல்லா நன்மைகளும பெருகுமாறு வேண்டுகின்றோம்.

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீமான் அரு. அரு. சோம. அவர்களின் ஏஜண்டு சுப்பா நாயுடு அவர்கள் நமது சித்சபைக்கான நல்ல காரியங்களிலெல்லாம் உதவிசெய்பவராகின்றார்.

இங்ஙனம் யாழ்ப்பாணத்தை சார்ந்த உள்நாடுகளில் யாத்திரையும் பிரசங்கங்களும் நடைபெற்று வரும்பொழுது "அளவெட்டி" என்ற இடத்தில் "இலங்கை நாட்டிற்குத் தலைமையாக "பிரம்ம நிஷ்டா மடம்" ஒன்று ஸ்தாபிக்க வேண்டுமென்றும் அதற்கான சகல செலவுகளும் தாம் கொடுப்பதாகவும் ஸ்ரீமான் பொ. காசிப் பிள்ளை அவர்கள் தெரிவித்தனர்.

காசினியிலுட்பட்ட சகல ஜனங்களும் நன்மை பெற வேண்டும் என்ற அஸ்திவாரக் கொள்கையின் மீது கட்டி யுயர்த்தப் பெற்ற பிரம்ம

நிஷ்டாமடம் சிற்சபைக்கு "அஸ்திவாரம் முதல் சகலசெலவும் தம்முடையதாக விருக்கவேண்டும்" என்றொரு அபிமானி முன் வந்ததை எல்லோரும் மனப்பூர்வமாகப் பாராட்டுவர். ஸ்ரீமான் காசிப் பிள்ளை அவர்களின் விசால நோக்கத்தையும் அவரது செல்வம் பெற்ற புண்ணியத்தையும் சகலரும் சாசுவதமாய்க் கொண்டாடுவரென்பதில் அபிப்பிராய பேதமில்லை. மனிதர்களைப் பார்க்கிலும் மனிதர்களால் அறிந்து செய்யப்படுகின்ற தர்மச் செயல்களை உலகம் மிக மதிக்கின்றதன்றோ? பிள்ளையவர்கள் விரும்பியவாறு 30-7-22 ல் மடத்தின் ஸ்தாபனத்திற்காக அஸ்திவாரக் கல் நாட்டப் பெற்றது. "பிரம்ம நிஷ்டா மடம் ஸ்தாபனமும் அதனாலுண்டாகின்ற நன்மைகளும்" என்ற விஷயத்தைக் குறித்து அவ்விடத்தில் ஒரு உபந்நியாசமும் நடைபெற்றது. பல கனவான்களும் ஏராளமான பொது ஜனங்களும் விஜயம் செய்திருந்தனர்.

"விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்பது போல வந்திருந்த ஜனங்களின் சந்தோஷத்தையும் ஊக்கத்தையும் நோக்கும் பொழுது "சிலோனில் முதன்முதலாக ஸ்தாபிக்கப் பெற்ற பிரம்மநிஷ்டா மடம் சிற்சபை நான்குபக்கங்களிலும் வேரூன்றி எங்கும் செழித்து ஒளிரும்" என்ற நற்குறிகள் காணப்பட்டன, என்னலாம். நமது சிற்சபையின் உத்தேசங்களில் அன்பு பாராட்டி நல்லுதவி புரிந்த நல்லூர் ஸ்ரீமான் தம்பையா அவர்களும் இயற்கையிலே கைம்மாறு கருதாத உபகாரியாவர். நாயன்மார்காட் ஆயுர்வேத டாக்டர் ஸ்ரீமான் சுப்பிரமணியம் அவர்கள் தமது பரோபகார உழைப்பைச் சிற்சபைக்கும் உபயோகித்தார். இவ்வாறு யாழ்ப்பாணத்தைச் சார்ந்த பல இடங்களிலும் யாத்திரை நடைபெற்று முடியும் பொழுது ஸ்ரீமான் K. V. மார்க்கண்டம், K. V. சுப்பிரமணியம் அவர்கள் சுவாமிகளை கதிர்காமத்திற்கு அழைத்துப் போய் வர விரும்பினார்கள். பிறவிப் பொருட் செல்வத்தைப் போல, பிறவியிலேயே தர்ம குணச் செல்வத்தையும் சகோதர முறையிலமையப் பெற்றுள்ள அவ்விரு சகோதரர்களும் விரும்பியவாறு சுவாமிகளும் கதிர்காம யாத்திரைக்குப் புறப்பட்டனர். ஆடி அமாவாசை தினத்தன்று எல்லோரும் கதிர்காமம் சென்று, அப்புண்ணிய காலத்தில் தீர்த்தமாடி, சின்மய சொரூபியாகிய கதிர் காம மூர்த்தியைத் தரிசனஞ் செய்தனர். அன்று மாலையிலும் மறுநாளும் பிரமாண்டமான ஜனத்திரளின் மத்தியில் சுவாமிகள் தமது இயற்கையான கம்பீரத் தொனியில் அரிய பெரிய பிரசங்கம் புரிந்தனர்.

அந்தப் புண்ணிய தினங்களில் செவிக்கு உணவளிக்கும் வேலையை சுவாமிகள் ஏற்றபொழுது வந்திருந்த ஜனங்களியாவர்க்கும் வயிற்றுக் குணவளிக்க வேண்டிய வேலையை சிரத்தையோடு ஏற்றுக்கொண்டது நமது மார்க்கண்டம் சகோதரர்களேயாவர். எங்கும் சமயோசிதமான தர்மஞ் செய்யவேண்டிய வேலையை இவ்விரு சகோதரர்களும் விட்டுவிடுவதில்லை என்பதைக் குறிப்பிடுவதற்காகவே அந்த லக்ஷக்கணக்கான ஜனங்களடர்ந்த கூட்டத்திலும் இவர்கள் செய்த வேலையைக் குறிப்பிடவேண்

டியதாயிற்று.

இனி, கதிர்காமக் காக்ஷியைச்சிறிது தெரிவிப்போம். "ஆகா! "கதிர்காமம்!" என்று நினைக்கும்பொழுதே நமக்குமயிர்க்கூச்செறிகின்றது! அங்குசெல்வோர் மெய்ம்மறந்து— அவசமாகி— உலகத்தின் "கடவுள் ஒருவரே" என்றஉண்மையைச் சகலஜாதி:மதத்தினரும் அனுஷ்டித்து ஒழுகுகின்ற ஒருமைப்பான்மையை எவரே வருணிக்கவல்லார்! அங்கு பரந்து காண்கின்ற அபேத பக்திஞ்ஞான உணர்ச்சியையும் எவர்தாம் வருணிக்க வல்லார்? இவ்வுலகத்தில் "உயர்ந்தோன், தாழ்ந்தோன்" என்ற வேற்றுமையுணர்ச்சியுடன் வாழ்ந்து வந்தோர் ஒருமுறை அக்கதிர்காமஞ் சென்று அங்கு விளங்குகின்ற அபேதஞான அகண்ட ஜோதிசொரூபக் காக்ஷியை ஓர் முறை தரிசித்து வருவாரானுல், அவர் உண்மையிலே நாஸ்திகத் தன்மையினின்றும் மாறுபட்ட சுபாவங்களோடும் மனத்திருப்தியோடும் திருவருள் பெற்றுத் திரும்பி வருவாரென்பதில் தடையில்லை. அந்த புண்ணிய பூமியை நெருங்குந்தோறும் ஜாதி மதம், ஆண் பெண்,தேசம் பாஷை, அசுத்தஆசாரம், குல கோத்திர உயர்வுத் தோற்றம், சுய நலச் செயல் யாவும் மாறுகின்றன; எங்கும் ஈசனது நாம கோஷமே கடலோசைபோல் முழங்குகின்றது; கதிர்காமத்தில் அன்று காணும் மாலைக் காக்ஷியை சுவர்க்க கைலாச வைகுண்டங்களிலும் காண்பதரிது. லக்ஷக்கணக்கான ஜனங்கள் ஏககாலத்தில் தமது சிரத்தில் விபூதி கற்பூர தீப ஜோதியைத் தாங்கிக் கொண்டு அவசநிலையில் கதிர்காம ஈசனைப் போற்றும் பக்தி நிலையை இவ்வுலகத்திலே உண்மையன்பர்களன்றி மற்றோர் காணும் பாக்கியம் கிடைத்தல் எளிதன்றே! இயற்கையிலே பலஈனர்களும் துற்குணிகளுமாகிய ஜனங்கள்கூட அங்கு விநோதமாகவேனும் ஒருமுறை செல்வார்களானுல், அவர்களறியாமலே அவர்களுக்குப் புதியதோர் சக்தியும் நற்குணமும் தோன்றுவதை அனுபவத்தில் காணலாம்! உண்மையான பக்தி ஞான யோகங்களின் முடிவையறிய விரும்புவோர் இப்பூலோகத்தில் முருகனது ஞான லீலா விலாச பூமியும் பிரத்தியக்ஷ கைலாசமும் மஹான்களின் தபோவனமுமாகிய அந்தக் கதிர்காம ஆலயஞ் சென்று ஓர்முறை தரிசிக்க வேண்டுமென்பதைத் தமது ஜன்ம உத்தேசங்களில் ஒன்ருக்கொள்ள வேண்டும். கதிர்காமத்தில் அவர்களுக்கு கிடைக்கும் பிரசாதம் "அகண்ட வியாபக அபேத சமரச ஞான அமுத" மாகும். இதனிலுஞ் சிறந்த பிரசாதம் தேவருலகுக்குச் சென்ருலும் கிடைக்குமோ! ஆகவே, நமது நேயர்களில் சக்தியும் உற்சாகமு முடையோர் இந்தக் கதிர்காமத்தின் விசேஷத்தைத் தரிசித்து மனித ஜீவிதத்தின் பரமப் பிரயோஜனத்தை யடைவார்களாக!.

இத்துணை சிறந்த கதிர்காம யாத்திரை, பக்தியிற் சிறந்த ஸ்ரீமான் K. V. சுப்பிரமணியம் அவர்களின் இடைவிடாத சகாயத்தினுலே சிறப்பாக நடைபெற்றது என்று சொல்லவேண்டும். புண்ணியமுடையோர்க்குக் காடு நாடு எல்லாம் ஒன்றே என்றும், எங்கும் அவர்களின் செல்வா

க்குக்கு அழிவில்லை என்றும் ஸ்ரீமான் சுப்பிரமணியம் சகோதரர்களின் புண்ணியச்செயல்கள் நிரூபித்துக்காட்டின. தர்ம குணத்தைத் தவிர்த்து வேறுகுணத்தை விரும்பாதவர்களும், சமூகாபிமானம் தெய்வ பக்தி இவற்றிற் சிறந்தவர்களுமாகிய இவ்விரு சகோதரர்களும் மார்க்கண்டனுக்கு அருள் புரிந்த மகேசன் கிருபையால் மானிலத்தில் என்றும் குன்றாக சுக செல்வ சகிர்த வாழ்க்கையுடன் விளங்கிவருமாறு எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளை மனமொழி மெய்களால் வாழ்த்துகின்றோம்.

இந்தியாவுக்குத் திரும்புதல்.

இங்ஙனம் கதிர்காம யாத்திரையும் பிரபுக்களின் உற்சாகத்தோடு திருப்திகரமாகப் பூர்த்தியானவுடன் இந்தியாவில் நடைபெற வேண்டிய அவசியமான பலகாரியங்களை யுத்தேசித்து சுவாமிகள் காலிமார்க்கமாக கொழும்பையடைந்து, தூத்துக்குடிவழியே அகஸ்தியாசிரமம் வந்து சேர்ந்தனர். தூத்துக்குடியில் ஸ்ரீமான் சுப்பய்யநாடாரவர்கள் அன்புடன் வரவேற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். பொது ஜனங்களின் உற்சாகம் பாராட்டத் தக்கது. இந்தியாவில் பிரம்ம நிஷ்டா மடம் சிற்சபையானது பல வகையிலும்முயற்சித்து பொதுநன்மைக்கான காரிய காரணங்களைப் பூர்த்தி செய்ததுபோல், இலங்கையிலும் அவை பூர்த்தியாகும்படி ஆங்காங்கு உடனிருந்து உதவி புரிந்த தனவான்களுக்கும் மேதாவிகளுக்கும் நாம் என்றும் நன்றிபாராட்டுகின்றோம்.

இதுகாறும் இந்திய மாதாவானவள் பிரம்ம நிஷ்டாமடம் சிற்சபையின் உத்தேசங்களை நிறைவேற்றுவதற்காகத் தான்மாத்திரம் தனித்துப் பாடுபட்டு வந்தாள். அவளது சகாயத்திற்கு இப்பொழுது இலங்கை தேவியும் முன்வந்திருப்பதால் இனி இவ்விரண்டு தேவியரும் முறையே தமது இருகரங்களாலும் மனிதவர்க்கத்தைக் கைதூக்கி விட்டு அதனை மேலான நிலைமைக்குக் கொண்டு வரும்படி செய்வதில் பிரம்ம நிஷ்டா மடம் சிற்சபையின் பிரேரணை கர்த்தாவாகிய ஸ்ரீ ஜகதீசன் துணைநின்று உதவி புரிவாராக! * * * சுபம்.

குயிலினும் இனிய குரலுண்டாக.

தேவதாரம். சிறு திப்பிலி, ஓமம், பச்சிலை, மரமஞ்சள் தோல், வசம்பு, இந்துப்பு, முருங்கை வேர், இவைகளை சம எடை எடுத்துப் பொடித்து வஸ்திரகாயம் செய்து அதில் வேளைக்கு ஒரு வராகனெடை வீதம் எடுத்து காலையில் தேனிலும் மாலையில் நெய்யிலும் குழைத்து உட்கொண்டால், நெஞ்சிலும் கண்டத்திலுமுள்ள கப தோஷங்கள் யாவும் நீங்கி, சாரீரச் செல்வத்தில் புகழ்பெற்ற கின்னரர் போலும் இனிய குரலுண்டாகும்.

வேறோர் முறை.

சுக்கு, சர்க்கரை, தேன், இவைகளைச் சமனெடை சேர்த்துப் பக்குவமாய் குளிகைபோல் செய்து வைத்துக் கொண்டு உபயோகித்து வந்தால் குயில் போன்று சாரீரம் தோன்றும்.

மற்றோர் முறை.

வெண் சோச்சி வேரை நல்லெண்ணெயில் அரைத்து நாவில் தடவி வந்தால் இனிமை பொருந்திய சிறந்த சாரீரம் (குரல்) உண்டாகும்.

ஞாபக சக்தி விருத்தியாக.

வசம்பு, பிரமி, வல்லாரை கோஷ்டம், மிளகு, சுக்கு இவை சம எடை எடுத்துக் கொள்ளவும். இவற்றில் பிரமி, வல்லாரை இரண்டையும் நிழலிலுலர்த்தித் தனித் தனியே பொடித்துப் பிறகு சமன் எடை எடுத்துக் கொள்ளவும். பாக்கியுள்ளவற்றைப் பொடித்து வஸ்திரகாயஞ் செய்து சமனெடையாக எடுத்து நெய் சேர்த்துக் குழைத்து, இரு வேளையும் உட்கொள்ள மிகுந்த ஞாபக சக்தி உண்டாகும்.

பிருஹஸ்பதிக்கு சமமான புத்தி உண்டாகும் வழி.

அதிமதுரம், அமுக்கராக் கிழங்கு, பால்முதக் கிழங்கு, பெரு செருஞ்சி, முத்தக்காசு கோரைக் கிழங்கு, ஜடாமஞ்சி, தண்ணீர் முட்டாங் கிழங்கு, பூனைக்காலி வித்து, செல்லிக்காய்த் தோடு, இலவம் பிசின் இவற்றைப் பொடித்து வஸ்திர காயம் செய்து சமனெடை எடுத்து அவற்றிற்குச் சமமாக சர்க்கரை சேர்த்து வைத்துக் கொள்ளவும். அதில் வேளைக்கு முக்கால் ரூபா எடை வீதம் எடுத்து அதிகாலையில் தேன் சேர்த்து அருந்தவும். பிறகு அவரவர்களின் ஜீரணசக்திக் கேற்ப கால் படி முதல் அரைப் படிவரை பசுவின்பாலை ஒருமண் பாத்திரத்தில் எடுத்து, பாலின் அளவுக்கு ஆறுபங்கு ஜலம் கூட்டி, நீர்பூராவும் வற்றியும் பால் வற்றுமலும் தன்னளவுக்கு வரும்பொழுது எடுத்து, அதில் கற்கண்டைப் பொடித்துப் போட்டு உட்கொள்ளவும். இவ்வாறு செய்துவந்தால் நீடித்த ஆயுளும், எவ்வளவு நூல்களைப் படித்தாலும் மேன்மேலும் ஏற்றுக் கொள்வதற்கு பிருஹஸ்பதிக்கு நிகரான ஞாபக சக்தியும் சரீர புஷ்டியும் தாதுவிருத்தியும் உண்டாகும்.

ஹிந்துமதமும் அதன் தற்கால நிலைமையும்:-

மடாதிபதிகளின் கடமை என்ன?

(6-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

உள்ளந்தோறும்— ஹிந்துமத ரகசியங்களையும் மதாபிமானச் செயல்களையும் ஸ்தாபிக்கா விட்டால் இப்பொழுது கல்விச்சாலை யந்திரங்களிலிருந்தும் நாஸ்திகர்களாக வார்த்து வெளியே தள்ளப்பட்டும், பாதிரிமார்களால் பைபிள் மூலமாய் விலைக்கு வாங்கப்பட்ட ஹ்ருதயத்தோடும் விளங்கிவருகின்ற நமது ஹிந்து வாலிபர்கள்—வருங்கால ஹிந்து நாகரிக வாழ்க்கையை நிலை நிறுத்தும் வீரர்கள்— நாம் கோடிக்கணக்கான திரவியச்செலவிட்டுச் செய்து வருகின்ற தேவாலய ஸ்தாபனங்களை இனி வருங்காலத்தில் மகமத் கஜினியைப்போல இடித்துத் தகர்க்கவிரும்புவார்கள்! இந்தப் பரிதாபகரமான நிலைமையில், ஹிந்துக்களினிடையே மதாபிமானங்கொண்டுள்ள மேதாவிகள் விரைவில் விழிப்புற்று, காங்கிரஸ் மகா சபையைப்போல "சர்வஜன ஹிந்துமத மகாசபை" ஒன்றைப் பிரமாண்டமாக கூட்டவேண்டும். இந்தியாவில் ஒவ்வொரு கிராமங்களிலிருந்தும் ஒவ்வொரு ஜில்லாக்களிலிருந்தும் சுயமதாபிவிருத்தியில் அக்கறை கொண்ட பிரதி நிதிகளை ஏராளமாகத் தருவித்து, அவர்களின் முன்னிலையில் ஹிந்து மதத்தின் சிறப்பையும் அதன் தற்கால நிலையில் காணப்படுகின்ற பரிதாப சம்பவங்களையும் பற்றிவிரிவாகப் பிரசங்கங்கள் பலபாஷைகளிலும் செய்து விளக்கவேண்டும். ஹிந்து மதத்தை வலுப்படுத்தி, ஹிந்துக்களுக்குள் ஒற்றுமையையும் பரஸ்பர அபிமான ஆதரவுகளையும் விருத்திசெய்யக்கூடிய சிறந்த எண்ணமும் சிரத்தையுமுடைய பெரியோர்களை—ஊக்கமுள்ளவர்களை—அந்த ஸபையிலிருந்தும் தெரிந்தெடுத்து, அவர்களையே அந்த அந்த மடங்களுக்கும் தகுதியான மடாதிபதிகளாகச் செய்யவேண்டும். மடாதிபதிகளாக வருவோர் அந்த மடங்களின் விசாரணைக்குள்பட்ட பிரதேசங்களில் வசிப்பவர்களது நாட்டு பாஷை முழுதையுமறிந்து, தாமே அந்த சிஷ்யர்களெல்லோரிடமும் நேரில் பேசக்கூடியவராயும், சிஷ்யவர்க்கங்களின் கஷ்ட சுகங்களுக்கு ஜவாப்தாராயிருந்து வேண்டிய நன்மைகளை விசாரித்து உடனுக்குடன் அவற்றை நிறைவேற்றி வைக்கத்தக்க சாமர்த்தியமுடையவராயும் கௌரவ ஆடம்பரங்களை எப்பொழுதும் விரும்பாதவராயும், மதாபிவிருத்திக்கு அனுகூலமான யோசனைகளை எவர் கூறினாலும் அங்கீகரிப்பவராயும், உலகத்தை எல்லாவகையாலும் கவனித்து வருபவராயுமிருக்க வேண்டும்.

மேலும், இப்பொழுதுள்ள மடாதிபதிகளில் யார்யார் மதத்தை விருத்தி செய்யவும் ஹிந்து சமூகத்தை உபதேச உதவிகளால் ஆதரித்து வரவும் சரீரமனச்சக்தி இடங்கொடுக்கப் பெற்றவர்களாய்க் காணப்படுகின்றனரோ அந்த ஜீவகாருண்ய நிதிகளை மாத்திரம் மடாதிபதிகளாக வைத்துக்கொண்டு, அவ்வித சக்தி யற்றவர்களாயிருக்கின்ற மடாதிபதிகளுக்கு உரியவாறு பொருளுதவிசெய்து அவர்களைத் தவஞ் செய்யும்படிக்கு அனுப்பி விடவேண்டும். அவர்களின் ஸ்தானத்தில் அந்த ஸ்தானத்தை வகித்து நன்றாக நிர்வகிக்கக் கூடிய சக்தியும் தவமுமுள்ளவர்களை முற்கூறிய முறைப்படி தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டும்.

நமது தாய்நாட்டை முன்னர் ஆண்டுவந்த அரசர்கள், (அல்லது இப்பொழுதும் ஆண்டுவருகின்ற அரசர்களில் சிலர்) தமக்கு தேசபரிபாலனஞ் செய்ய சக்தியோ, மனமோ இடங்கொடாதிருக்கும் பக்ஷத்தில் மாலிகான்-அலவன்ஸ்-பெற்றுக்கொண்டு விலகி விடுவது வழக்கமாகும். அவர்கள் அவ்விதஞ்செய்வது முறையேயாம்! அதனால், அவர்களுக்கும், அவர்களது பிரஜைகளுக்கும் மிக்கநன்மையுண்டு. அதுபோல, நமது ஹிந்து மடாதிபதிகளும் செய்வார்களானால், குறித்த ஸ்தானத்தை நிர்வகிக்க முடியாது கஷ்டப்படுகின்ற, அந்தமடாதிபதிகளுக்கும் அவர்களது சிஷ்யர்களுக்கும் பேருதவியாயிருக்கும். விவேகமுதிக்கப் பெறாத சிறு குழந்தைகள் மரப்பதுமைகளைக் கொண்டாடுவதுபோல, ஹிந்து மதத்தின் பூரண அறிவு அனுபோகங்களின்றி— அதனைப் பரிபாலித்து ஜன சமூகமெங்கும் பரவச் செய்யுந் திறனின்றி— வீணேயிருக்கின்ற சக்தியற்ற மடாதிபதிகளையும் நாம் வீணே பல்லக்குவாகனங்களில் ஏற்றிவைத்துச் சுமந்து கொண்டு, மனச்சாக்ஷிக்கும் மதாபிவிருத்திக்கும் விரோதமாய்ப் பூஜித்து (அல்லது பூஜிப்பதுபோல் நடித்துத்) திரியவேண்டுமென நிர்ப்பந்தமில்லை. பௌத்தர்கள் முன்னொரு காலத்தில் தமது வேஷ சன்னியாசிகளையே பூஜித்து ஏமாந்து சகல சுதந்தரங்களையுமிழந்ததுபோல, நாமுஞ் செய்யவேண்டுமென நமது ஹிந்துமதம் ஒரு குருட்டு நியாயத்தை நமக்கு உபதேசிக்க வில்லை; அவ்விதக் கொள்கையை நாம் மனத்தாலும் நினைக்க வேண்டியவர்களல்லர்! "ஆத்மசாக்ஷிக்கு திருப்தியானதைச்செய்" என்பது ஹிந்து மதத்தின் முரசாகும். ஆதலால் சக்தியுள்ளவர்கள், தர்மஸ்தானங்களை நிர்வகித்தால் தான் ஹிந்து ஜன சமூகத்தின் உத்தேச காரியங்கள் நிறைவேறுமென்பதை நாம் மறக்கக்கூடாது. பூர்வகாலத்தில் ஹிந்து சமுதாயத்தில் சக்தியுடையவர்களே தர்ம ஸ்தாபனங்களின் ஆசாரிய பீடத்தை அலங்கரித்து விளங்கினார்களென்பதையும் நாம் ஞாபகத்தில் கொள்ளவேண்டும். ஆசாரிய பீடத்து அமர்ந்து விளங்கிய சில மதாசாரிய மகான்கள், தமது 'ஸ்தானத்திற்கு உரிய மனதும் உத்தேசமுமுடைய மாணாக்கர்கள் எங்கிருக்கின்றார்களெனத் தேடித்திரிந்து'

பொருத்தமான சிஷ்யரைத்தெரிந்தெடுத்து அவரிடம் தமது ஸ்தானத்தை ஒப்படைத்ததாய்ப் பல சரித்திரங்கள் நம் மதாசாரிய நூல்களில் காணப் படுகின்றன.

இந்த உண்மையைச் சிலகாலமாக நம்இந்து சமூகம் மறந்துவிட்ட தனுலேயே அதன் கலைகளும் சுதந்தர செல்வங்களும் சீரழிந்தன. இப் பொழுதுள்ள மடாதிபதிகளோ, தம்மிடத்துள்ள எட்டுப்பிரதிகள், அச்சுப் புத்தகங்கள் முதலியவற்றை வெளிக்குக் காட்டவும் மறுக்கின்றனர். அவை "எவருடைய சொத்துக்கள்" என்பதை அவர்கள் நினைத்துப் பார்க்க மறந்துவிடுகின்றனர்! அதனுல் அரிய பெரிய புத்தகங்கள் பலவும் கரையானுக்கு இரையாகி அழிகின்றன. மதத்தையும் அதன் நூல்களையும் பரிபாலிக்கும் உரிமையாளரே இவ்விதஞ் செய்யும்பொழுது, அந்த மதத் தின் ஒருபகுதியிலடங்கியவராகிய மாஜி—காச்மீர மந்திரி லக்ஷக்கணக்காக மதிப்பிடக் கூடிய எட்டுப்பிரதிகளை இங்கிலாந்திலுள்ள காக்ஷிச் சாலைக்கு இனுமாகஅளித்துவிட்டதைப்பற்றி நாம்ஞாபகமூட்டவிரும்பமாட்டோம்! ஹிந்துமதமே நீ தூங்கினது போதும். நீ பட்டுப்பூச்சியைப்போல் தனக் குத்தானே வெளிவரமார்க்கமின்றியநிலையில் மடாதிபதிகளின் துரபிமான வலையில் ஈடுபட்டுத் திண்டாடியது போதும். ஹிந்துக்களே! இப்பொழு துள்ளமடாதிபதிகள் பெரும்பாலும் ஹிந்து சமூகநன்மைக்கெனயாதொரு வேலையும் செய்வதில்லை. அவர்களொவ்வொருவரும் ஒவ்வொருகுறுகிய கொள்கையைத் தமது மனேராஜ்ய எல்லையாக அமைத்து அதில் ஏகாதி பத்தியஞ்செலுத்த ஆசைப்படுகின்றுர்கள். ஹிந்துக்களின் தர்மசொத்துக் களை ஹிந்துக்களெல்லோரையும் ஒன்றுசேர்க்கவும், அவர்களின் கக்ஷிபேத துரபிப்பிராயத் துவேஷ உணர்ச்சிகளை மாற்றி, "ஹிந்து ஜன சமூகத்தை ஒரு குடும்பமெனக் கருதுமாறு" செய்வதற்கும் உதவி செய்வதில்லை. மேதாவிகள் தக்க முயற்சியெடுத்து, உடனே இத் துன்பங்களை நிவர்த்தி செய்யவும், மகாநாடு கூடவும், அசோக சக்கரவர்த்தி செய்ததைப்போல் பூலோகமெங்கும் ஹிந்துமதப் பிரசாரஞ் செய்து ஜனங்களைத் திரட்ட வும் வேண்டும். அதற்காக ஆயிரக்கணக்கான (லக்ஷக்கணக்கான என்று கூறவேண்டும்!) வாலிபர்களையும் மதாபிமானிகளையும் பற்பல பாஷை யறிந்தவர்களாய்த் தெரிந்தெடுத்து, அவர்களை ஆதியில் இந்தியாவுக்கும், விலோனுக்கும்அனுப்பி, தாழ்ந்தஜனங்கள் முதல் உயர்ந்த ஜனங்கள்வரை யாவருக்கும் மதரகசியங்களைப்பற்றிப் போதிக்கும்படி செய்யவேண்டும். அசோகன் புத்தமதாபிவிருத்திக்காகத் தனது ராஜ்ய சொத்து முழுதை யும் தந்தஞ்செய்து, தனது சகோதரியையும் புத்திரியையுங்கூட தியாகஞ் செய்ததுபோல, ஹிந்து மதத்தைப்பற்றித் தீவிரமான பிரசாரஞ் செய்யவேண்டி இந்தியாவில் பிறந்துள்ள கல்விச் செல்வவான்கள் தம்மாலியன்றவரை உடல் பொருள் ஆவி, மக்கள்முதலிய எல்லாவகை யாலும் தியாகஞ்செய்ய முற்படவேண்டும். ஹிந்துக்களின் ஜீவன்

"ஹிந்து மதம்" என்பதை உணரவேண்டும். ஜீவன் போனபின் எத்தகைய செல்வங்களும் அதற்குப் பயன்படமாட்டாவன்றோ?

இதோ ஜெனரல் பூத் என்னும் பாதிரியார் * 1000, மெஷினரிகளைக் கொண்டுவந்து இந்தியா, சைனா, ஆப்பிரிகா, முதலியநாடுகளில் கிறிஸ்துமதப் பிரசாரஞ் செய்வதற்காக 'சென்ற அக்டோபர்மாதம் 19-ம் தேதி' அமெரிக்காவைச்சார்ந்த ந்யூயார்க் நகரத்திற்குப் புறப்பட்டுவிட்டார்! இப்பொழுதே தினந்தோறும் இந்தியாவில் ஹிந்து மதத்தினின்றும் கிறிஸ்து மதத்திற்குச் செல்வோர் சராசரி 300, பெயர்களாவார்களென ஒரு நண்பர் கணக்கெடுத்திருக்கின்றார். மிஸ்டர் ஜெனரல் பூத்தினால்,பிரமாண்டப் பிரசாரஞ் செய்யப்படும்பொழுது இனியும் எவ்வளவு பெயர்கள் அந்த மதத்திற்குச் சென்றுவிடுவார்களென நாம் மனத்தினாலேயே தீர்க்காலோசனை செய்து ஊகிக்கவேண்டும். இப்பொழுது முதல் தாழ்ந்த ஜனங்கள் என்று ஒதுக்கிப் பேசப்படுகின்ற ஜனங்களின் மீது நம்முடைய கவனத்தைப் பன்மடங்கு செலுத்த வேண்டும். பின் வருந்துவதால் பயனில்லை. இவற்றிற்குத்தக்கபரிகாரஞ் செய்யவேண்டி மீண்டும் ஒருமுறை வேண்டுகின்றோம்.

இந்திய தேசவாசிகளே!இனியும் உதாசீனம் வேண்டாம்.

ஹிந்து சமூகாபிமானிகளே! விழித்துக் கொள்ளுங்கள்; எழுந்திருங்கள்: இத்துன்பங்களை நீக்குவதற்கு விரைவில் முன்வாருங்கள். சக்தியுடையவர்களிடம் ஹிந்து மதத்தையும் ஹிந்துக்களின் தர்மஸ்தாபனங்களையும் ஒப்படையுங்கள். சர்வ ஜனங்களுக்கும் சுக செல்வ க்ஷேமங்களை விருத்தி செய்யுங்கள். எல்லோரும் ஒத்துமையாக வாழ்வதற்கு வழி தேடுங்கள். ஹிந்துக்களின் முன்னேற்றத்திற்கு இதுதான் நல்லதருணம்.

இனி, எந்த மடங்களுக்கும் யோக்யதையற்ற ஜாதிச் சாமியார்களை நியமிக்க வேண்டாம். ஆனால், அந்த மடங்களின் ஆதிகர்த்தர்களும் ஸ்தாபகர்களும் என்ன உத்தேசத்தோடு அவைகளை ஸ்தாபித்தார்களோ அந்த உத்தேசத்தை நிறைவேற்றத்தக்க சாமர்த்தியமும் பக்தி, அன்பு, விசுவாசம், பொறுமை, அமைதி, பரோபகாரம், ஆத்மஞானம்இவைகளும் நிறைந்தவர்களாய்ப் பார்த்து தெரிந்தெடுத்து, அந்த ஸ்தானங்களை அவர்களிடம் ஒப்பித்துவிடுங்கள். இத்தகைய நற்குணங்களின் வாசனையே அறியாதபோலி -ஜாதி- சாமியார்களை இனியும் நியமித்தால், அவர்கள் பட்டத்திற்கும் புகழுக்கும், பொருளுக்கும் ஆசை கொண்டவர்களாய் விளங்குவார்களேயன்றி அவர்களிடமிருந்து நாம் ஹிந்து மத அபிவிருத்

* இஃது 1920-ம்வருஷம் எழுதப்பட்டமையின் அக்காலத்திய சம்பவத்தை யுணர்த்துகின்றது.

திமையோ, அதன் அபிவிருத்திக்கான தீவரப்பிரசாரச் செயல்களையோ எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் அவர்களுக்கு 'தாம் பிறந்த' கிராமம் ஜாதி, வேஷம், பாஷை, ஆசாரம், ஆகாரம் முதலிய இவைதாம் மோக்ஷ வீட்டையடைவிக்கும் ஏணிகளென அவர்களைச்சூழ்ந்துள்ள—ஜாதிச்சாமி சகோதரர்கள்— உறவினர்கள் போதித்து விடுகின்றார்கள். அதனால் நாம் முற் கூறியபடி அவர்கள் இந்த சில்லரை யபிமானங்களைக்கடந்து, ஹிந்துமதம், "உலக மதம்" எனக்கருதி, உலகத்திலுள்ள சர்வஜனங்களை யும் வீண் துன்மார்க்கங்களில் செல்லாவாறு தடுத்து, ஹிந்து மதத்தின் சிறந்த கொள்கைகளைப்பின்பற்றித் தம் தம் வாழ் நாளைப்புநிதமாக்கும்படி செய்ய அவர்களுக்கு சக்தியும் விசால நோக்கமும் இருப்பதில்லை. அவ் வாசாரிய மணிகள் மகான்களின் மரபில் வந்த பெரியோர்களாகக்கருதப் படுகின்றனராயினும் அவர்கள் அந்த மடங்களின் சொத்துக்களைச் சொந்த சொத்துக்களாகச் செய்து கொள்ளக்கருதி கோர்ட்டு, வக்கீல், வாயாடி, சூதாடி, டம்பாசாரி முதலியவர்களுக்குப் பணங்கொடுத்து தமது கடமை யை நிறைவேற்ருது ஏமாற்றவும், தர்ம சொத்துக்களைத் துர்விநியோகஞ் செய்யவுமே தமது அறிவு சாமர்த்தியங்களை யுபயோகித்துக் கொள்ளு கின்றனர். தர்மவழிகளையும் பூரண சுதந்தரத்தையும் விடுத்து ஏனோ இவர்கள் இக்குறுகிய மார்க்கங்களில் சென்று திண்டாடவேண்டும்? சிவஞான செல்வானுபூதிபெற்று ஒரு உத்தமமதத்தின் ஆசாரியபீடத்து அமர்ந்து விளங்குகின்ற ஒரு மதாசாரியனுக்கு இயற்கையிலே எவ்வளவு கௌரவங்களும் மரியாதைகளும் அமைகின்றன! அந்த ஞானிக்கு நிகராக ஈசன் ஒருவனன்றி யற்ற எவரேனும் நிகருண்டோ? அவர் பயப்படவேண் டிய பொருள்களும் உலகத்திலுள்ளனவோ! அவர்தம் பெருமைக்கு ஓரளவுமுண்டோ! அசோகன் "உபேந்திரகுப்த ஆசாரியனது பாதத்தி லன்றோ கோடிக்கணக்கான பொன் நாணயங்களைச் சமர்ப்பித்துச் சரண்புகுந்தான்?

இவ்வளவு பெருமையுடைய மகான்கள் தமது மகிமை யையும் கடமையையும் அறிந்து கைக்கொள்ளாமையாலன்றோ ஹிந்து மதம் அபிவிருத்தியின்றிக்கிடக்கவும், அதன் ஜனங்கள் பக்திஞானமின்றி பிச்சை யெடுத்துத்திரியவும் ஏதுவாயிற்று! அம்மட்டோ? அமெரிக்கா தேசத்திலிருந்து 195, லக்ஷம் புரோடஸ்டாண்டு மதஸ்தர்கள் முப்பது பாகமாகப்பிரிந்து இருபதுகோடியே அறுபது லக்ஷம் ரூபாயை ஆரம்ப மூலதனமாகக்கொண்டு, இந்தியாவிலுள்ள ஹிந்துக்கள், புத்தர்கள், சௌராஷ்டிரர்கள், சமணர்கள் யூதர்கள் முதலிய எல்லா மதஸ்தர்களையும் அடியோடு இந்த வருஷத்திற்குள்—$1831\frac{1}{4}$—நாளைக்குள் "கிறிஸ்தவமதஸ்தர் களாக்கி விடவேண்டும்" என்று தீர்மானித்திருப்பதாய் பத்திரிகைகள் கூறுவதுபோல செய்யவும் இடங்கொடுத்துவிட்டது!

'தர்மத்தை தெய்வமாகக்கொண்டு' தர்மத்திற்காக உயிர்வாழ விரும்புகின்ற ஹிந்துக்களே! இனியும் தூங்கிக்கொண்டிருத்தல் தர்மமோ! காலநிலையையும் உலகின்போக்கையும் உணராமலிருப்பது புத்திமான்களுக்கு அழகோ? இப்பொழுது ஹிந்துமதமும் ஹிந்துக்களும் பெயர்மாத்திரமாக மீந்தழியும்படி நீங்கள் பாராமுகமாயிருத்தல் பொருந்துமோ? உங்களுடைய தாய்நாட்டில் தோன்றி, உங்களுடைய முன்னோர்களாலும் சக்கரவர்த்திகளாலும் மஹான்களாலும் போற்றி வளர்ந்து மேன்மையோடு விளங்கிவந்த—ஒரு தெய்விகத்தன்மைவாய்ந்த—உங்களின் ஆத்மாவுக்குப் பரம இன்பநிலையை யளிக்க கூடிய—ஒரு உத்தம மதத்தை நீங்கள் அந்நிய மதத்தினரிடம் ஒப்படைத்து உதாசீனமாக இருந்து விடலாமோ? உங்களது ஆத்மாவிற்கு அமுதம் போல் இன்பமளித்து அமுதத் தன்மையளிக்கின்ற 'ஹிந்து மதம்'என்னும் கற்பகவிருக்ஷத்தை, நீங்களும் உங்களுடைய முன்னோர்களும் வேலிகளாய்ப் பாதுகாத்து வந்திருக்க அதனை நீங்கள் தற்காலம் அழிய இடங்கொடுப்பது, அல்லது பிறர் அழிக்க முற்படுவதைப் பார்த்திருப்பது உங்களுக்கு தர்மமோ! நீங்கள் —ஹிந்துக்கள்!— நேர்மையாய் உயிர்வாழவேண்டுமென விரும்பினால், பின்வருமாறு சில திருத்தங்களையும் வேலைகளையும் உடனே செய்யவேண்டும்.

அவையாவன:—

1. மடாதிபதிகள் எல்லோரும் தம்தம் அபிப்பிராயங்களுக்கு மாறுபாடான சில அமிசங்களை ஒதுக்கிவைத்துவிட்டு, அவர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து, தாம் ஹிந்து மதத்தின் ஒவ்வோர் அவயவங்கள் எனக் கருதி, அதன் ஜீவாதாரமான வாழ்க்கை லக்ஷயத்தை நிலை நிறுத்த, உடல் பொருள் ஆவி மூன்றாலும் உதவிசெய்யமுன் வருமாறு செய்யவேண்டும்.

2. அதற்காக ஒரு மகாநாடு உடனே (முற்கூறியவாறு) கூட்ட வேண்டும்.

3. ஹிந்து மதாபிவிருத்திக்கான தர்ம ஸ்தாபனங்களின் சொத்துக்கள், தேவாலயங்கள், சத்திரங்கள், மடங்கள், வித்தியாசாலைகள் இவைகளுக்கென விடப்பட்டபூமி சொத்து சுதந்தரங்கள் எவ்வளவு என்பதை அந்த மகாநாட்டில் ஒரு உண்மையான (ஆதாரத்துடன்) கணக்கெடுக்க வேண்டும்.

4. மடாதிபதிகளின் ஒற்றுமைக்காக ஒரு ஸபை எற்பட்டு அந்த நோக்கத்திலேயே அது வேலை செய்யவேண்டும். அவ் விஷயத்தில் அக்கரையும் அனுதாபமும் கொண்ட பிரம்மசாரி, கிருஹஸ்தன், துறவி முதலியவர்களை அந்த சபையில் மெம்பர்களாகச் சேர்க்கவேண்டும்.

5. இந்தியாவிலுள்ள சகல கலா சாஸ்திரங்களையும் ஒருங்கே சேர்த்து, ஒரு இடத்தை அதன் தலைமை ஸ்தானமாகவைத்து, அந்தப் பூர்விக நூல்களை எல்லா தேசபாஷைகளிலும் மொழிபெயர்த்து * தேசமெங்கும் அனுப்பவேண்டும்.

6. இனி, ஞானசித்தியின் பொருட்டு சன்னியாசம் வாங்கிக் கொள்ளுவதாய்கூறி (போதியவிவேகவைராக்கியகர்மதர்மபக்வமின்றியும்) குருமுகமாக சாஸ்திர பாடமும் அனுஷ்டான முறைகளும் அறிந்து அனுஷ்டிக்காமலும், சுயேச்சையாகக் (கூடா வொழுக்கங்களையும் தவிர்க்காமல்) கேவலம் காஷாய வேஷதாரிகளாய், சந்நியாசத்தை ஒரு போலிச் சடங்காக நடத்தியோ, அல்லது நடத்தாமலோ குடீசகன் என்றும், பகூதகன் என்றும், ஹம்ஸன் என்றும் பரம ஹம்ஸனென்றும் தாமே பெயர் வைத்துக்கொண்டு கிராமங்களிலும் நகரங்களிலும் திரிகின்ற லக்ஷக்கணக்கான சந்நியாசிகள் அந்தமுறையில் உலகத்திற்கு வேண்டப்பட்டவர்களல்லர். ஏனெனின், அவர்கள் ஞானத்தைவிரும்பிய அப்பியாசிகளுமல்லர். ஆகவே, எல்லோரும் சந்நியாசிகளாகப் புறப்பட்டுப் புகழுக்கும் பூஜைக்கும் பொருளுக்கும் ஆசைப்பட்டதனுலேயே இப்பொழுது இந்தியாவில் பல வகுப்பினரிலுமாக 60, லக்ஷம் துறவிகள் குவிந்து கிடப்பதாய்க் கூறப் படுகின்றது. இவர்கள், ஒரு சரீரத்தின்பல பாகங்களிலும் தோன்றி, அச் சரீரத்தின் மற்ற அங்கங்களால் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கப்படுகின்ற உணவு பொருள்களின் பயனை உண்பதற்கு மாத்திரம் காத்திருப்பனவும், அச்சரீரத்தின் நன்மைக்கானயாதொரு வேலையும் செய்யாமல் அங்ஙனஞ் செய்கின்ற அங்கங்களுக்கும் பாரமளித்துத் தொல்லை செய்வனவும், ஆனல், அச்சரீரத்தின் மற்ற அங்கங்களின் நன்மைக்காக உட் கொள்ளப் படுகின்ற உணவின் சாரத்தை —இரத்தத்தை— பலாத்காரமா யிழுத்துப் பரித்துக்கொணடு சோம்பேரிகளாய் தொங்கிக்கொண்டு உயிர்வாழ்வனவுமாகிய கழலைகள்போல, ஹிந்துஜன சமூகமாகிய சரீரத்தில் தோன்றி "சோம்பல்கழலை சந்ந்யாசிகள்" எனப் பெயர் பெற்று விளங்குகின்றனர். இதனல் ஹிந்து மதத்தின் ஞானராஜ்யத்தில் உயர்ந்த அந்தஸ்தை —படிகளை— அடைந்து விளங்குகின்ற பரமஹம்சன், துரீயாதீதன், ஜீவன் முக்தன், விதேகமுக்தன்— அவதூதன் முதலிய மஹான்களும் கௌரவமும் மதிப்பும் பூசிதையும் இல்லாமல்— உலகம் நன்மைபெறும் நல்லோர்

* அரேபிய நாட்டு அரசர்களில் ஒருவராகிய "காலிப் ஆரன் ஆல்ராச்சிட்" என்பவர் இதர பாஷைகளிலுள்ள எல்லாப் புஸ்தகங்களையும் சேகரித்து பற்பல பண்டிதர்களின் மூலமாய் அவைகளை தமது சுயதேச பாஷையில் மொழி பெயர்க்கச்செய்து, தமது தேசத்திலுள்ள சகல ஜனங்களும் அவற்றைப் படிக்குமாறு செய்ததை இங்கு நினை வூட்டுகிறேன். (அ. நா.)

••

களை அறியமுடியாமல்—உண்மையாகவே அவர்களுக்கு உதவி செய்து பயன்பெற முடியாமல்— தவிக்கின்றது. ஆதலால் இனி, "பலனற்ற நிர்பந்தங்களுக்கு உட்பட்டு, உலகத்தைச் சீர்திருத்தச் சக்தியும் தவமும் இல்லாத இத்தகையபோலிச் சந்நியாசிகளிடம் மதபரிபாலன உரிமைகளை ஒப்படைக்காமல், சமரச ஞானத்தழும்பேறி, உலகத்திலுள்ள சகல மனிதர்களும் பிராணிகளும் அவ்வவற்றின் அறிவு சக்திக்கு ஏற்ப அபிவிருத்தி யடைந்து நன்மை பெறுவதில் அக்கறையும் அன்புங் கொண்டு, அதற்குரிய மார்க்கங்களை யுபதேசிக்கும் உண்மைத் துறவி களாகிய மேதாவிகளிடமே அந்த தர்மஸ்தாபநங்களின் ஆசாரிய உரிமையை அளிக்கவேண்டும்.

7. இந்த வேலைகளை நடத்துவதற்காக ஷை தர்மஸ்தாபனங் களிலிருந்து ஒரு பெருந்தொகையைச் சேகரித்து, அதை ஆரம்ப மூல தனமாகவைத்துக்கொண்டு ஆயிரக்கணக்கான பிரசாரகர்களை— அதற்குரிய கல்விகற்பித்து வெளியே அனுப்பவேண்டும். வருஷந்தோறும் ஷை தர்ம ஸ்தாபனங்கள் இந்தவகைக்கு ஒரு தொகையை விடாது கொடுத்து வரவேண்டும்.

8. பல பாஷைகளிலும் பிரசாரத்திற்கெனவே தினப்பதிப்புப் பத்திரிகைகளை நடத்தவேண்டும். பிரசாரத்தின் பயனை அதன் மூலமாக தினந்தோறும் வெளியிடவேண்டும்.

9. ஹிந்துமத சம்பந்தமான சாஸ்திர ஆராய்ச்சிகளும், அனுபவ நிலைகளும், மற்றும் உலக நன்மைக்குரிய மேதாவிகளின் அபிப்பிராயங் களும் அந்தப் பத்திரிகைகளில் தாராளமாக வெளியாகும்படி செய்ய வேண்டும். மத சம்பந்தமான கேள்விகளுக்கு விடையளிப்பதை அந்தப் பத்திரிகைகளின் நோக்கங்களில் ஒன்றாகச் செய்யவேண்டும்.

10. ஸ்திரீகளுக்கு கற்பு, பாகசாஸ்திரம், சிசுபரிபாலனம், குடும்பவைத்தியம், ரசவு, சுகாதாரம், 'அறிவைப்பெருக்கி நகை ஆசை யைக்குறைத்து விவேகத்தை விருத்திசெய்து மனச்சமாதான தெய்வ பக்தி ஜீவகாருண்யங்களோடு வாழும்படி போதிக்கத்தக்க' மதக்கல்வி ஆகிய இவற்றை போதிக்கவேண்டும்.

குறித்த வேலைகளை உடனே தொடங்காவிடில் ஹிந்துக்களின் வாழ்க்கை சிறிது காலத்திற்குள் சரித்திரதில் மாத்திரம் விளங்கும்படி எற்படும் என்பதும், அந்நிய மதத்தினர் தமது பிரசார சாமர்த்திய விசேஷத்தால் அவ்விதமே செய்ய முற்படுவர் என்பதும், நாம் குறிப் பிடாமலே ஞாபகத்திற்கொள்ளவேண்டிய முக்கிய விஷயமாகும்.

மரணத்தைத் தடுத்தல்:-

தேவத்துவ சித்தி.

(முன் தொடர்ச்சி)

என்று எதை எதையோ சாக்குப் போக்குச் சொல்லி அனுப்பிவிட்டார். ஆதலால் ஒருகாலத்தில் ஒருவிஷயம் மிக்க அருமையாயும், "வேறு எந்த உலகங்களுக்குச் சென்றேனும் கண்டுபிடிக்க வேண்டுமென்னும்" அத்தகைய, சிறந்த, அடங்காத ஆவலை யுண்டுபண்ணக்கூடிய தத்துவமாயும் இருக்கலாம். அக்காரணம் பற்றி, அது "உலகத்திலேயே இல்லாத விஷயமென்றோ, அல்லது பூலோக வாசிகளுக்கே தெரியாத விஷயமென்றோ தீர்மானஞ் செய்வதற்கு" நியாயமில்லை. இக்காலத்தில் மிக்க எளிதாக இருக்கிற—அன்று யமனிடம் கேட்ட நசிகேதஸுக்கும் திருப்தியளிக்குமாறு எளிதாகும்படி—இதோ எழுதுகிற இந்த விஷயமே இனி ஒருகாலத்தில் கிடையாமலும் போகலாம். அவ்வாறே, முற்காலத்தில் மிக்க அருமையாக இருந்த வித்தைகள், கலைகள், ஆராய்ச்சிகள், உண்மைகள் இப்பொழுது மறைந்து காண்பதே இதற்குப் போதிய சாக்ஷிபகரும். மாற்றுருவங்கொண்டு சஞ்சரிக்கின்றனவும் புதியனபோல் உலகத்திற்கு தோன்றுவனவும் இந்த இனத்தில் சேர்ந்தவைகளே. இது இயற்கையின் இயல்புகளில் ஒன்று.

3. இனி, மூன்றாவது உதாரணத்தைக் கவனிப்போம். ஒரு மனிதன் சிந்தாமணியை (நினைத்ததையளிக்கும் ரத்தினத்தைச்) சம்பாதித்து வரவேண்டுமெனக் கருதி, இமய மலைப்பிரதேசத்தே நாடிச் சென்றான். அவனது கருத்தை யுணர்ந்த சித்தர்கள் அவனது கண்களில் படும்படிக்குச் "சிந்தாமணியை" எதிரே போட்டனர். ஆனால், அந்த சிந்தாமணியை அவன் கைகொண்டெடுத்துப் பார்த்து, அதன் உண்மை மகிமையை உணரச்சக்தியற்றவனாய் "இது சிந்தாமணியன்று, சிந்தாமணி என்பது இவ்வளவு எளிதாகக் கிடைக்குமா?" என்று அலக்ஷியஞ்செய்து, அதை தூரத்தே எறிந்தான். அம்மட்டோ? பிறகு அவன் காடுமுழுதையும் கிளைத்துப்பார்த்து, பாதாளம்வரை தோண்டி "ஒருபாசிக்கல்லை" அரியபெரிய மகிமைவாய்ந்த சிந்தாமணி என்றுகருதி, விரைவில் எடுத்துக்கொண்டு வீடுசென்று இந்த சிந்தாமணிரத்தினத்தால் தனக்கு சகல செல்வங்களும் வாய்த்தன போலும் கருதி அங்குள்ள சொத்துக்கள் யாவற்றையும் தெருவிலெடுத்து எறிந்தான். அப்பால் அவன் காட்டுக்குச் சென்று ஆசனத்திலமர்ந்து

மேற்படிகல்லைகையில்வைத்துக் கண்களை மூடிக்கொண்டு "பலபலபொருள்கள் கிடைத்து தனது ஆசைகள்யாவும் நிறைவேற வேண்டுமென்று" நினைத்து நினைத்துப் பார்த்தான். கடைசியாகக் கண்களும் கைகளும் வலிகொண்டனவேயன்றிக் காரியமொன்றும் கைகூடவில்லை! அதுபோல ஒருபொருள் எளிதில் கிடைத்தால் அது மகிமையில் குறைந்ததென்றும், ஒரு பொருள் பிராணாவஸ்தைப்பட்டு பிராப்தமானால் அது மகாபலனைக் கொடுக்கக்கூடியதென்றும் கருதுவது தவறு.

சுயதேச அவமதிப்பும் பிறமொழி நட்பும்.

இனி ஒரு அரிய விஷயத்தை ஒருவர் வெளியிடுவாராயின் அவர் தமது தேசத்திற்கு சமீபத்தில் பிறந்தவராகவேனும் அல்லது தமது தேசவாசியாகவேனும் இருப்பாராயின், அவர் வெளியிடுகின்ற விஷயம் அவ்வளவு சிறந்த உண்மையாக இருக்கமாட்டாதென்றும், அது இங்கிலாந்திலோ, அல்லது அமெரிக்காவிலோ, வசிக்கக்கூடிய சில ஆங்கிலடாக்டர்களால் அன்னிய பாஷைகளில் வெளியிடப் பட்டால்தான் கௌரவத்துடன் ஏற்கத்தக்கதென்றும் நினைப்போர்பலர் நம் நாட்டிலுண்டு. அதுவும் தீயகுணமாகும்.

ஆங்கில வால்மீகியும் சிந்தனாசக்தியற்ற ஜனங்களின் சுபாவமும்.

அது ஆங்கில வால்மீகியாகிய "ஹோமர் சாகும்வரை அவருக்கு ஒரு ரொட்டித்துண்டுகூட உதவிசெய்யாமல் கிராமம் கிராமமாய் (ஏழுகிராமம்வரை) தள்ளிவிட்டு, கடைசியாக அவர் இறந்தபின் அவருடைய சரித்திரம் எழுதுவதற்கெனச் சிலர் முயன்றபொழுது, 'முன்னர் ஹோமரை ஆதரியாத' ஒவ்வொரு கிராமவாசிகளும், சரித்திரப் புகழுக்குஆசைப்பட்டு லக்ஷக்கணக்கான பொன்நாணயங்களைச்செலவிட்டு, ஹோமர்தம்முடைய கிராமத்திலேயே வாழ்ந்துவந்தனர்! என்று சாதிக்க முயன்ற, மேல்நாட்டினரின் நாகரிக முறையையே தழுவியதாகும். நமது முன்னோர்களின் வழக்கமோ, அவ்விதமன்று. "யுக்தியுள்ள வசனங்களை ஒருகுழந்தை கூறினும், கிளிகூறினும் அவைகளை அங்கீகரித்துப் பயன் பெறவேண்டு"மென்பதே புராதன இந்திய நாகரிகமுறையாகும். இந்த முறையை நாம் தழுவாவிட்டால், எட்டாவது கிராமத்தினர் ஹோமரின் சிலா லிகிதத்தைக்கொண்டு, தாங்களே ஹோமரைப்பூராவும் பரிபாலித்தவர்களென்றும் ஹோமர் தங்களுடைய கிராமத்திலேயே வாழ்நாள் முழுதும் வாழ்ந்து வந்தவரென்றும் நிரூபித்து அந்தப்புகழுக்குத்தாங்களே பாத்திரவான்களென்றும்கூறி, ஹோமருடைய 'என்பு' ஒன்றுக்கு எவ்வளவு பவுன் கொடுத்தபோதிலும் அதை வெளிக்குக் காட்டோமென்றும் நிராகரித்து, முற்கூறிய ஏழுகிராமத்தினர்க்கும் மற்றுள்ளோர்க்கும்

"பெரியோர்களை அனுதாவு செய்ததாலுண்டாகும் தவறுகள் புத்தியிற் படுமாறு செய்தது" போல, நம்தேசத்தில் தோன்றி அரியவிஷயங்களைக் கண்டு பிடித்துக்கூறுகின்ற பெரியோர்களது ஆராயச்சி விஷயங்களுக்கு நாம் ஆதாவளியா விட்டால், அந்த ஹோமரை நிராகரித்த எழு கிராமத்தினரைப்போல் பின் வருந்தும் நிலையைநம்நாட்டினர் அடையவும், எட்டாவது கிராமத்தினர் பெற்ற புகழை மேல்நாட்டினர் பெறவும் ஏதுவாகு மென்பது திண்ணம்.

அனுபவ அறிவு தீமையாதலும் கேள்வியறிவின் பெருமையும்.

பின்னும் சிலர், ஒருவிஷயத்தைப்பற்றித் தாம் நேரில் அனுபவித்துப் பார்த்தாலன்றி நம்புவதில் பயனில்லை என்று கூறுவார்கள். இந்த வாதம் சிலாகிக்கத்தக்கதே! ஆனால் எல்லாவிஷயங்களிலும் அது சாத்யமா என்பதே கேள்வி. உதாரணமாக: "குஞ்சன் என்பவன் நஞ்சைத்தின்று இறந்தா னென்றும், ஆதலால், நஞ்சைத்தின்போர் இறந்துவிடுவரென்றும்" ஒருவர்கூறுவதாகவைத்துக்கொள்வோம். அவ்விதமானால், "எந்த விஷயத்தையும் தாமே நேரில் அனுபவித்துப் பார்த்தாலன்றி நம்புவதில்லை" என்ற பிடிவாதக்காரரது சங்கதியை இந்த நஞ்சைத் தின்னும் விஷயத்திலும் அனுஷ்டித்தல் சாத்தியமா? அது அவசியமுமாகுமா? அவ்விதஞ்செய்தால் "தின்பவர்" மாளவேண்டியதைத்தவிர்த்து வேறுவழியுண்டா? இந்த அனுபவத்தில் வெற்றிபெறுவதற்காக அவர் உயிர்துறந்தால் இந்த அனுபவ அறிவைக்கொண்டு அவர் அடைகின்ற பயனென்ன? ஆதலால் சிற்சில விஷயங்களில் "தமது சொந்த அனுபவமில்லாவிடினும், அனுபவத்திற்குப் பொருந்தும்படி கூறுவதையே அங்கீகரிப்பது நலம்,

காரிய சித்திக்கு இடையூறில்லாத குற்றங்களைக் கவனியாமை.

இனி, உண்மை அனுபவத்திற்கு உலகத்தில் அநேகம் வழிகளுண்டு. அவைகளில் அனுகூலமானவைகளைத் தெரிந்துகொண்டு நாம் வேலை செய்தால் வெற்றிபெறலாம். அனுகூலமானவழிகளைக் கூறுவோரிடம் யாதொருகுறையு மிருக்கக் கூடாதென்றும், அவ்விதம் வேறு ஏதேனும் குறைகளை யுடையவர்களாயிருப்பின், அவர்கள் கூறுகின்ற உபாயங்கள் தவறுதலுடையன வென்றும் கருதுவது பிழை. அநேகம் மருந்துகளைத் தெரிந்துகொண்ட ஒருவைத்தியன் ஏதோ ஒருநோயுடையவனாய், அதாவது அந்த நோயை நீக்கிக்கொள்ளத் தெரியாதவனாகவோ, அல்லது தெரிந்திருந்தும் அதற்குப்போதுமானபடி செலவுசெய்து நீக்கிக்கொள்ள முடியாதவனாகவோ, ஆதரவற்றவனாகவோ, இருக்கலாம். அவன் மற்றும் பல நோய்களுக்குத் தக்க பரிகாரங்களை யறிந்தவனாகவும் இருக்கலாம். அவ்விதமிருந்தும், குறித்த நோயொன்று (அதாவதுஏதோஒருகுறை) அவனிடம் இருப்பதனாலேயே அவன் கூறுகின்ற மருந்துக்கும் வீரியமிருக்க

மாட்டாதென்றும், அந்தமருந்தை யருந்துவோர்க்கு நோய்கள் தீராவென்றும், கருதஇடமில்லை; அதுயுக்தி யநுபவங்களுக்குப் பொருந்தியதுமல்ல, ஆதலால், காரியசித்தியை விரும்புவோர் விஷயத்தின் போக்கையே கவனித்து முடிக்கவேண்டும்.

அறிவின் விளக்கத்திற்கு உரியகாரணங்கள்.

இனி, உலகத்தில் அறிவானது பல காரணங்களால் உண்டாகின்றது; விளக்கமாகின்றது. ஆயினும், அவைகளை முக்கியமாக மூன்று முறையில் கூறிவிடலாம். அவை 1. கேள்வி யறிவு 2. யுக்தி யறிவு 3. அநுபவ அறிவு. இவற்றை முறையே பரோக்ஷ ஞானமென்றும், யுக்தி ஞானமென்றும், அநுபவ ஞானமென்றும் வடமொழியில் கூறுவதுண்டு. இவற்றில் 'அறியாத அநுபவத்தில் விருப்பத்தை யுண்டாக்குவது' பரோக்ஷ ஞானமாகும். 'விரும்பிய விஷயத்தை யடையச் செய்வது' யுக்தி ஞானமாகும். யுக்தி ஞானத்தின் வாயிலாகமுயற்சித்துக் காரிய சித்தி பெறுவதற்கே அநுபவ ஞானமென்றும் அபரோக்ஷ ஞானமென்றும் பெயர்.

ஆனால், இங்கு முற்கூறிய கேள்வி யறிவு (பரோக்ஷ ஞானம்) முதலில் உண்டாகா விடின், எவர்க்கும் எதனிலும் விருப்பமுண்டாகாது. விரும்பாத பொருளைக் குறித்து முயற்சிப்பார் எங்குமிலர். ஆகவே, கேள்வியறிவுதான் மிகமிக முக்கியமாகின்றது. அதனாலேயே, கேள்வி யறிவானது நீண்டகாலமாய் இவ்வுலகத்தில் வாழ்ந்து வந்து, மனிதனை ஒவ்வொரு முயற்சியிலும் தூண்டிக்கொண்டு வருகின்றது. அந்தக் கேள்வி யறிவைக்கொண்டே மனிதன் அநுபவ அறிவை யடுத்துச்செல்லுகின்றான். கேள்வியறிவுக்கும் அநுபவஅறிவுக்கும் இடையில், அதாவது கேள்வி யறிவை அநுபவ அறிவில் கொண்டு சேர்த்துவிடுவதற்கு இடையில் அந்த'யுக்தி'என்னும் கருவியொன்று வேண்டப்படுகின்றது. அநுபவ அறிவானது மனிதனுக்கு எவ்வளவு சமீபத்திலிருந்தாலும்,அந்த அநுபவப் பொருளை மிக மிக நெருங்கி அவன் அப்பொழுதே அடையக் கூடிய நிலைமையி லிருந்தாலும், அநுபவத்திற்குரிய பொருள் அவன் கண் முன்னே தோன்றினும், அதனை அடைவதற்காக அவன் எவ்வளவு தூரம் முயன்றபோதிலும், அவன் இந்த 'யுக்தி' என்னும் கருவியின்றிக் காரிய சித்தி பெறுதல் கஷ்டமாகும். ஆனால், அந்த யுக்தி முறையைக் கூறுபவர்கள் தாமே அவ்விதஞ் செய்து காட்டக் கூடிய சக்தி யுள்ளவர்களாக இருந்தால்தான் அந்த முறை பலிக்குமென்றும், அவ்விதம் செய்து நிரூபிப்பதறகுச் சக்தி யற்ற நிலைமையி லிருப்பவர்கள் தெரிவிக்கின்ற யுக்தி பயன் தராதென்றும் கருத இடமில்லை. வேறொரு வகையில் அதற்கு இனியும் ஒரு உவமானங் கூறலாம்.

யுக்தியினால் அனுபவம் பெறுவதற்கு ஒருஉதாரணம்.

சில மனிதர்கள் ஒரு வனாந்தரத்தில் யாத்திரை செய்தார்கள். அவர்கள் வெயிலில் விரைவாக நடந்து சென்றமையால் பசி தாகங்களால் வருந்தினார்கள். அவர்கள் அக்காடெங்கும் பசிதாகங்களை நீக்கத்தக்க உணவு பொருள்கள் எங்கேனும் கிடைக்குமா என்று சுற்றிப்பார்த்தனர்; எங்கும் காணப்படவில்லை. முடிவில் ஒரு குடிசையைக்கண்டு, அங்குஏதேனும்உணவு பொருள் கிடைக்குமா என்று விசாரித்தனர். குடிசைக்குள் இருந்த ஒரு கர்ப்பிணிஸ்திரீ, தனது தோட்டத்தில் சில தென்னை மரங்களிருக்கின்றனவென்றும், அவைகளிலிருந்து வேண்டிய தேங்காய்களைத்தின்று பசிதாகங்களைத் தீர்த்துக்கொள்ளலாமென்றும், வேறு அத்தருணத்தில் அவர்களுக்கு உதவிபுரிய யாதொரு உணவு பொருளும் தன்னிடமில்லை யென்றும் அனுதாபத்துடன் கூறினாள்.

யாத்திரிகர்கள் பரம சந்தோஷத்தோடு, பக்கத்திலிருந்த தோட்டத்திற்குச் சென்று தேங்காய் பறிக்க முயன்றனர். மரத்தின்மீது பச்சைப் பாசி படர்ந்து ஒருவரும் ஏறமுடியாவண்ணம் சருக்கினமையால் யாத்திரிகர்கள் மாறி மாறிப் பன்முறை மரத்திலேறியும் தேங்காய் பறிக்கமுடியவில்லை; சருக்கிவிழுந்தனர். பின்னர் கற்களெறிந்தும், ஒருவர்மீதொருவராக ஏறியும், பலவகையில் முயன்றும் பகீரதப்பிரயத்தனஞ் செய்து பார்த்தனர்; ஒன்றிலும் பலிக்கவில்லை. "இனி ஈசன்வந்தாலும் அந்த மரத்தில் தேங்காய் பறிக்கமுடியாது" என்று தீர்மானித்து, விசனத்துடன் அந்த கர்ப்பிணியிடஞ்சென்று, தாங்கள் தேங்காய் பறிப்பதற்காகப்பட்டகஷ்டங்களையும், செய்த முயற்சிகளையும் விரிவாக எடுத்துக்கூறி, எந்தவகையாலும் தென்னைமரத்தில் தேங்காய் பறிக்கமுடியாதென்றும், தீர்மானமாக வற்புறுத்தி, அந்தஅம்மாளிடம் வேறு ஏதேனும் உணவு பொருளுக்கு பதிலாகத் தின்பொருள் இருந்து கொடுத்தால் போதுமென்றும் பேசி முடித்தனர். இதைக்கேட்ட கர்ப்பிணி ஆச்சரியமுற்று யாத்திரிகர்களே! தேங்காய்பறித்து நீங்கள் வயிருற உட்கொண்டு, பரமசந்தோஷமடைவதற்கு மிக்க எளிதான உபாய மொன்றிருக்கிறது; அதை நீங்கள் இப்பொழுது செய்து உங்கள் கையினாலேயே தேங்காய் பறித்துத் தின்று களிக்கும்படி செய்கிறேன்; அமிர்தத்திற்கொப்பான இளநீர்நிறைந்திருக்கும் தேங்காய்களை ஒரு நிமிஷத்திற்குள் பறித்துத்தின்பதற்குரிய வெகு எளிதான உபாயம்--கருவி--கைக்குள்ளிருக்க, அதனையுணராமல் தேங்காய் வேண்டாமென்றும், அது கிடைத்தல் அசாத்திய மென்றுங்கருதி, நீங்கள் எதற்காக வருந்தவேண்டும்? என்று கூறினாள். யாத்திரிகர்கள் இந்த வார்த்தையை நம்பவில்லை. கர்ப்பிணி இருந்த இடத்திலிருந்துகொண்டே "அதோ ஏணி இருக்கின்றது, அதை எடுத்துச்சாத்திக்கொண்டு வேண்டிய காய்களைப்பறித்துக்கொள்ளுங்கள்" என்று தெரிவித்தாள்.

யுக்தியினாலடையப் பெற்ற காரியசித்தி.

இந்த யுக்தியைக் கேட்ட யாத்திரிகர்கள் அவ்வாறே செய்து பசி தாகங்களைத்தீர்த்துச்சென்றனர். இதனால், நாம் முன்னர் தெரிவித்தபடி ஒருவன் விரும்பிய பொருள் அவனுக்கு எதிரேயிருப்பினும்—அவன் அதனை அனுபவிப்பதற்குத் தயாராக இருப்பினும்—அவன் அதனை அனுபவிப்பதற்கு, (அதாவது முற் கூறியபடி அனுபவஅறிவை அடைவதற்கு) ஒரு யுக்தியாகிய கருவி அவனுக்கு வேண்டப்படுகின்றது என்பது நன்கு விளங்கும். அந்த யுக்தி முறைக்கு வழி காட்டியா யிருப்பவர்கள் அந்தப் பொருளைத் "தாமே நேரில்எடுத்து அனுபவித்து நிதர்சனப்படுத்தித்தான் கூறவேண்டும்" என்ற நிர்ப்பந்தமுமில்லை. குறித்த கர்ப்பிணியானவள் தான் இருந்த இடத்திலிருந்தே ஒரு யுக்தி முறையைத் தெரிவித்தாளே யன்றி அவள் ஏணியின்மீது ஏறித் தேங்காயைப் பறித்துக்கொடுக்கவில்லை. அவள் அவ்விதஞ்செய்ய வேண்டிய நிர்ப்பந்தமுமுண்டோ?

அந்த கர்ப்பிணியைப்போல, அனுபவத்திற்குப் பொருந்தத்தக்க நல்விஷயங்களைத் தெளிவாகக் கூறுவோர் சிலரிருப்பார்கள். அவர்கள் "தாம் நேரில் செய்து நிரூபித்துக்காட்ட முடியாதவர்களாகவோ, அல்லது அவ்வித சௌகரியமற்ற நிலைமையிலிருப்பவர்களாகவோ" இருக்கலாம். ஆகவே, "மரணத்தைத்தடுப்பதற்குரியவழிகள்" என்ற இவ்விஷயத்தைத் "தாம் செய்துகாட்டினால்தான் நம்பமுடியும்" என்ற கக்ஷி அவ்வளவு அவசியமானதல்ல. யுக்தி மார்க்கங்களைக் கூறுவோர்களது வாய்மொழிகளைப் பின்பற்றி வேலை செய்தாலேயே உத்தேசப்பயனை யடையலாம்.

அழியாத்தன்மை தேகத்திற்கா? அல்லது ஆத்மாவினுக்கா?

8. இனி, மரணத்தைத் தடுக்கும்வழிகள் ஆத்மாவைப்பற்றியனவா, அல்லது சரிரத்தைப்பற்றியனவா என்று தெரிந்து கொள்ளச் சிலர் விரும்புவர். "ஆத்மா, அழிவற்றது; நித்தியத்தன்மை வாய்ந்தது" என்ற கொள்கையை ஹிந்து மதத்தின் எல்லா நூல்களும் ஜயபேரிகை முழக்குவதால், அந்தக்கொள்கையையே நாம் மீண்டும் தெரிவிக்க விரும்பவில்லை. ஆனால், சரீரத்தையே அழியாதநிலையில் கொண்டுவருதல், என்னும் விஷயத்திற்காக மாத்திரம் நாம் பலமார்க்கங்களை விளக்க விரும்புகின்றோம்.

அமுதமருந்தலும், அமுதத்தன்மை பெறுதலும்.

9. நாம் இங்கு தெரிவிக்கின்ற வழிகள் "தேவர்கள் பாற்கடலைக் கடைந்து அமிர்தம்பெற்று, உயிர்நீங்காத வாழ்க்கையைப் பெற்றது போல" ஏதோ சிலமூலிகைவர்க்கங்களைக்கொண்டு அமுதத்தையுண்டாக்கி,

அழியாத சரீரத்தைப் பெறலாமென்று கூறப்போவதாகவோ வேறு எவ்விதமோ கருதவேண்டாம். தேவர்கள்பெற்ற அந்த அமிர்தங்கூட சாதாரண அமிர்தமென்றும், சாக்ஷாதமிருதத்தன்மையடையும் வழிகள் (நேராக அமுதத்தன்மைபெறும்வழிகள்) வேறுபல "இந்த சிருஷ்டியின் உண்மையமைப்பில் அடங்கிக்கிடக்கின்றன" என்றும் அவரவர் அறிவைக் கொண்டே உணர்ந்து, இன்புறுமாறு செய்வதே நமது முயற்சியின் உத்தேசமாகும். இந்த சாக்ஷாதமிருதத்தன்மையின் பெருமையை விளக்குதற்கு இங்கு ஒரு உதாரணம் வரைவோம்.

உதாரணம்.

சூரபத்மாசுரன் தேவர்களைச் சிறையிலடைக்குமாறு கட்டளையிட்டான்; அவனது ஏவலாளர்கள் தேவர்களை அளவற்ற துன்பங்களுக்கு ஆளாக்கினர். அவர்கள் தேவர்களது சரீரங்களைத் துண்டு துண்டாக வெட்டினர்; ஹிம்சித்தனர்; தேவர்களின் உயிர் நீங்கவில்லை. வெட்டுண்ட அவயவங்கள் மீண்டும் மீண்டும் ஒட்டிக்கொண்டன. தேவர்கள் வருந்தினர். "ஐயோ! நாம் சாதாரண அமிர்தத்தை உட்கொண்டதனாலன்றோ நமது சரீரம் துண்டு துண்டாக வெட்டப்பட்டும் மீண்டும் மீண்டும் ஒட்டிக்கொண்டு துன்பஞ் செய்கின்றது. மர்த்தியர்களாக (அதாவது இறக்குந் தன்மையையுடைய பூலோகவாசிகளாகப்) பிறந்திருந்தால், ஒரே அடியில்-அப்பொழுதே-நாம் உயிர் துறந்துவிடலாமன்றோ? அந்தப் பாற்கடல் அமிர்தத்தை யுண்டது அனர்த்தமாகவல்லவோ முடிந்தது! சித்தர்களைப் போல் * சாக்ஷாத் அமிருதத் தன்மையடையக் கூடிய வழிகளில் ஒன்றைக்கைக்கொண்டிருப்போமாயின், இந்த அசுரர்களது வெட்டுங் குத்தும் நமது சரீரத்தைச் சிறிதும் பாதிக்கமாட்டாதன்றோ? அப்பொழுது நாம் யாதொரு பயமுமின்றி உயிர் வாழ்ந்திருக்கலாமன்றோ? அந்தஇரண்டு நிலைமையுமின்றிப்பாற்கடலில் தோன்றிய சாதாரண அமுதத்தை யருந்தியதாலன்றோ படாதபாடுகள் படுகின்றோம்! என்று தங்களது நிலையை நினைந்துநினைந்து விசனித்ததாக வியாசருங் கூறுகின்றார்.

இனி, சாக்ஷாத் அமிருதமுறைகளைக் கைகொண்ட சித்தர்களின் சரீரத்திற்கு ஒருவராலும் பௌதிகப்பொருள்கள் ஒன்றாலும் உபத்திரவஞ் செய்ய முடியாதென்பதற்கும், அவர்கள் சதாரண அமிருதத்தைப் பருகிய தேவர்களைப்போல துன்பமடைய வழியில்லை யென்பதற்கும் ஒருசிறிய திருஷ்டாந்தங் கூறுவோம்.

---

* சாக்ஷாத் அமிர்தத் தன்மையை யடையும் வழிகள் ஆறு. அவை மேலே விவரிக்கப்பெறும்.

சாகாத உடம்புபெற்ற சித்தர்களின் பெருமை.

தக்ஷன் என்பவன் 9 பிரம்மாக்களில் ஒருவன். அவன் ஈசனையவமதித்து ஒருயாகஞ் செய்தான். அதற்கு எல்லாத்தேவர்களையும் முனிவர்களையும் வரும்படி கட்டளையிட்டான். அவ்வாறு சித்தர்களுக்கும் கட்டளையனுப்பினான். அடிக்குப் பயந்த தேவர்களும் சாதாரண முனிவர்களும் அங்கு சென்றனர். அகஸ்தியரோ, "ஈசனை யவமதித்துச் செய்கின்ற தக்ஷனுடைய யாகத்தில் நமக்கென்னவேலை? நாம் போகவேண்டிய அவசியமேயில்லை" என்று தீர்மானித்து, அவ்வாறே தக்ஷனுக்குச்செய்தி சொல்லியனுப்பி விட்டனர்! தக்ஷனும் அச்செய்தியை யுணர்ந்து, சித்தர்களின் விஷயத்தில் தன்னால் ஒன்றுஞ் செய்ய முடியாததைப்பற்றி வெட்கமுற்றான். இதனால் பாற்கடல் அமுதத்தை யருந்திய தேவர்களுக்கே அஸ்திர சஸ்திர ஆயுதங்களால் பயம் முதலியன உண்டென்றும், சித்தர்களுக்கு அத்தகைய யாதொரு தொல்லையுமில்லை யென்றும், அவர்கள் தமது சித்தம் போல் எங்கும் எக்காலத்திலும் வாழ்ந்திருக்கலாமென்றும் தெரியவரும். ஆகவே, நாம் "இங்கு சாக்ஷாத் அமிருதமுறைகளை யுணர்ந்து, சித்தி பெற்று, அழியாத சரீரத்தோடு அவனியில் வாழ்வதெப்படி?" என்ற விஷயத்தைத்தெளிவாகவும் ஸையன்ஸ் முறைப்படியும் இனி விவரிக்க முயல்வோம்.

ஜீவித தர்மம்.

மரணத்தைத் தாண்டும் விஷயத்தைத் தெரிந்து கொள்ளுமுன், ஜீவிததர்மத்தையும் (வாழ்வின் இயல்பையும்) நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். ஜீவித தர்மம் என்பது எல்லா ஜனங்களுக்கும் தெரிந்த விஷயந்தானென்றும் ஆதலால் அதனை விவரித்தல் அனாவசியமென்றும் சிலர்க்குத் தோன்றக் கூடும். ஆனால், ஜீவிததர்மத்தை யுண்மையாக அறிதல் சாஸ்திரீய முறையைப் பின்பற்றியதாயிருக்க வேண்டுமென்பதை விளக்குவதற்காகவே இங்கு அதனைப்பற்றிச் சிறிது கூற வேண்டிய கடமை நமக்கு ஏற்படுகின்றது.

இருவகையறிவு.

இந்த ஜீவிததர்மத்தை யறியும் வகை இரண்டாம். ஒன்று சாமானிய அறிவின் விளக்கமும் மற்றொன்று விசேஷ அறிவின் விளக்கமுமாகும். இவற்றை நன்கு புலப்படுத்தவேண்டி இரண்டு திருஷ்டாந்தங் கூறுவோம்.